
"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

ஆடி -ஆவணி -புரட்டாதி- 2001

# கலசம்
# KALASAM

விம்பிள்டன் ஸ்ரீ கணபதி
ஆலய தேர் சிறப்பிதழ்



பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆன்மிகக் காலாண்டிதழ்

# Royal Jewelry

SML

உங்கள் எண்ணங்கள் எங்கள் கைவண்ணத்தில்

புன்னகைக்கு நிகர் எங்கள் பொன்னகையன்றோ!

* மனம் கவரும் தங்க நகைகள்

*தங்கம் - கரட் உத்தரவாதம்

*தாலி - பொன்னுருக்கல் வசதிகள்

*உங்கள் தேவைகளுக்கேற்ற வண்ணம் நகைகள் பிரத்தியேகமாய் தயாரிக்கும் வசதிகள்

* சாத்திர விதிகளுக்கு ஏற்ப நவரத்தின மோதிரங்கள் ஓடர்களுக்குச் செய்து கொடுக்கப்படும்



287, HIGH STREET NORTH ,
EAST HAM,
MANOR PARK,
LONDON E12 6SL
Tel: 0208 472 5500

ஆசிரியர் தலையங்கம்
ஈசன்நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

கலசம்

மணி 9

கலசம்
KALASAM
ஆடி–ஆவணி–புரட்டாதி 2001

ஒலி 35

SAIVA MUNNETTA SANGAM UNITED KINGDOM 21.8.77

# ஒருவனே தேவன்

கலசத்தின் 35ஆவது இதழ் இது.

எல்லாம் வல்ல விம்பிள்டன் விநாயகப் பெருமானின் தேர் உற்சவச் சிறப்பிதழாக இவ்விதழ் மலர்கிறது. இந்த நேரத்தில் விம்பிள்டன் விநாயகர் ஆலயத்தின் ஸ்தாபகரும் இறைபதம் அடைந்தவருமாகிய திரு A.T.S இரத்தினசிங்கம் அவர்களை அன்போடு நினைவு கூருகின்றது கலசம்.

இவ் ஆலயம் தற்போது புதிய தலைமுறையின் வழி நடத்தலில் நடைபெறுவதும் பல புதிய நல்ல மாற்றங்கள் ஆலயத்தில் தோன்றியுள்ளமையும் மனதைத் தொடுபவையாக உள்ளன.

பலமத வழிபாடுகளை ஏற்றுக் கொண்டவரும் மதங்களுக்கிடையிலான சமத்துவத்தை அவ்வம் மதங்களின் தனித்துவத்தோடு ஏற்றுக்கொள்ளவேண்டுமென வலியுறுத்துபவருமான பகவான் சத்தியசாயிபாபாவின் வழிபாட்டு நிலையத்தை ஆலயத்தோடு கொண்டிருத்தலும் இவ் ஆலயத்தின் சிறப்புகளில் ஒன்றாகும்.

மனித சேவையே இறைசேவை என்பதை ஏற்றுக் கொண்டு இயங்கிவரும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் இறை தொண்டுக்கு மாசு கற்பிக்கும் வகையில் மெய்கண்டார் ஆதீனம் பகிரங்கக் கடிதம் எழுதியுள்ளதாக புதினம் பத்திரிகையில் வந்த செய்தி மனதை துன்பப்படுத்துகின்றது.

ஆஞ்சநேயர் சுவாமியின் ஆலய ஆரம்பவிழாவுக்கு அவர் சென்றதாகவும், அதனால் அவர் சிவத்துரோகம் புரிந்துவிட்டதாகவும், கூறுவது எம்மை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இவ்விதழ் வருகின்ற இவ்வேளை ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய திருவிழா வைபவம் ஆரம்பமாகி நடைபெறுகின்றது. திருவிழா இனிதே நடைபெற்றுப் பக்தர்களுக்கு அம்மனின் அருள் இனிதே கிடைக்க நாமும் அம்மனை வேண்டிக் கொள்கின்றோம்.

ஆலயங்களின் ஒருங்கிணைப்புக்குழு இவ்வேளையில் நான்காவது உலகச் சைவ மகாநாட்டையும் நடாத்த உள்ளமை உள்ளத்தைக் குளிர்விக்கின்றது. இம் மாநாடு செவ்வனே நடந்து வெற்றி பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் நமசிவாய

ஆசிரியர்

**உனது சமயத்திற்குப் புறம்பே செல்லாதே அதனுள் எல்லாம் உண்டு**

# கலசம் 35

## உள்ளே......


ஆசிரிய தலையங்கம் 1
உள்ளே 2
ஒல்லாந்தில் ஓர் ஆலயம் 3
The Shree Ghanapathy 4
வேலையும் அதன் ரகசியமும் 7
கனகதுர்க்கா எனும் அமுத சுரபி 12
வியாழன் 14
சிறுவர் கலசம் 17
ஓங்காரமும் பிரபஞ்சமும் 25
திருவருட்பயன் கற்போம் 28
சைவ சித்தாந்தச் செம்மல் 30
இலண்டன் முத்துமாரியம்மன் 34
விநாயகர் வழிபாடு 36
எனது பக்கம் (ஆணவம்) 39




பிரித்தானிய சைவத் திருக்கோயில்களின் ஒன்றியம் நடத்தும் நான்காவது ஆண்டு உலகச் சைவமாகாநாடு வெற்றியுடன் நடக்க கலசம் வாசகர்களும், ஆசிரியர் குழுவும், சைவமுன்னேற்றச் சங்கத்தினரும் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.



**அட்டைப்பட விளக்கம்**

**விம்பிள்டன் விநாயகர் தேரில் பவனி வரும் காட்சி**


**ஆசிரியர்:**
திரு மு. நற்குணதயாளன்
**துணை ஆசிரியர்:**
திரு சி. அற்புதானந்தன்



**57, Blandford Waye, Hayes, Middlesex, UB4 0PB England**
**Tel: 0208 573 0368**
**Fax: 0208 573 4233**
**Email: kal@hotmail.com**



**நிர்வாகம்:** திரு வ.இ. இராமநாதன்
**உதவி நிர்வாகம்:** திரு சிவ அசோகன்
**நிர்வாகக்குழு:**
திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம்
திரு. ந. சிவராசன், திரு சி. தர்மலிங்கம
டாக்டர் ந. நவநீதராசா, திரு.ச. சிறீரங்கன்,
திரு சு. வைத்தியநாதன், திரு.ச. யோகநாதன்


**அன்பின் வழியது உயிர் நிலை**

# ஒல்லாந்தில் ஓர் ஆலயம்

டென்கெல்டர் என்னுமோர் பொன்நகராம்- அங்கு
சிந்தையில் நிறைந்திடும் தெய்வமொன்றாம்
ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் அவர் பெயராம்
என்றும் குன்றா அருளுண்டாம்

செவ்வந்தி ரோசா கிருஷாந்தி டாலிகால்-என்ற
ஒல்லாந்தில் சிறந்த பூக்களினால்
நித்தம் பூஜை வழிபாடாம் அங்கு
வேண்டும் வரம் யாவும் கைகூடிடுமாம்

வாழை பலா மா முக்கனியோடு பால் இளநீர்-நல்
தயிர் சந்தணமும் நித்தம் அபிஷேகமுமாம்
பக்தர்கள் பொங்கி வழிந்து நிரம்பிடவே
இடம் போதா நிலையொன்று தோன்றியதாம்

வல்லபையின் நாயகன் ஸ்ரீ வரதராஜ- செல்வ
விநாயகரின் பேரருளால் விண்ணைத்தொடு
ராஜ கோபுரத்துடன் விரைந்து விநாயகன்
ஆலயம் ஒல்லாந்தில் அமைந்திடுமாம்.

செல்வ விநாயகர் பேரருளினால் எங்கும்- வாழ்க்கை
செல்வங்கள் பல்கிப்பெருகி வளர்ந்திடவே
வரம் வாரி வழங்கும் வள்ளல் அவன்
ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் தாள் பணிவோம்.


**ஆக்கம்- திருமதி விமலாதேவி சிவனேசன்**

**இசைமெட்டு**
**செந்தமிழ் நாடெனும் போதினிலே-**
**இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே**

**கொடிறும் பேதையும் கொண்டது விடா**

# THE SHREE GHANAPATHY TEMPLE

***By Geetha Maheshwaran***



In 1979, my father, the late Mr. A.T.S. Ratnasingham, began the greatest challenge of his life when, with the support of family and friends, the Churchill Halls in Effra Road were purchased and the first Saiva Hindu Temple dedicated to Lord Ganesha was created for our community here in the U.K.

Whilst work continued day and night to convert the former church into a traditional Saiva Temple, the adjoining church hall was converted into a Sai Mandir - a prayer hall dedicated to Bhagavan Sri Sathya Sai Baba. This was opened on 1st January 1981 and, the following September, the Shree Ghanapathy Temple was opened with a grand and lavish Maha Kumbabishekham, making it the first fully consecrated Hindu Temple in Europe.

From its first service in 1981, the Temple has grown and adapted to the changing needs of our Community. The principal vision of my father, the Temple's Founder and first Chief Co-ordinator, was to create a spiritual and vibrant Temple that catered for the needs of the future generations of young Hindus growing up here in the U.K. His greatest concern was that the next generations were in danger of losing contact with their ancient culture and religious heritage, and so he created an environment where children and young adults could be taught traditional music, religion and dance, linked to the spirituality of the Temple. After his death in 1998 we, his family, took on the responsibility of running the Temple and have continued his vision, with the help and support of our many wonderful & dedicated volunteers.

Over the years, the Temple's focus has shifted from that of purely ritualistic worship, to a more holistic approach - providing for the spiritual, moral and emotional needs of our community. So, although we perform all the services of a traditional Hindu Temple e.g. regular religious services, festivals, births, weddings and death ceremonies etc. We also arrange talks and discussion groups by experts in religion, and philosophy, we conduct yoga & meditation classes and also health seminars during the year.

A group of devotees from the Temple & the Merton Sai Centre form a core group of volunteers who help with many community projects within the London Borough of Merton, including meals on wheels, food for the homeless, hampers for the elderly and conservation work. Each year, we also have more than 3000 local children, students, teachers and members of other faiths, who come to the Temple to learn more about Hinduism.
The principle ethos that runs through all our work is that "Service to Man is Service to God".

The Temple administration has a good balance of young men and women who bring new ideas and a fresh approach to the Temple, and also a group of older, more experienced members of the community, who help to keep the traditions and original vision of the Temple alive. This Temple was created to serve our people, to give spiritual and emotional comfort to all those who need it. We have no fixed rates for basic religious services at the Temple - thus allowing people to give what they wish or what they can afford. Our basic principle is that the Temple is open to all who wish to come and pray, regardless of wealth or status, social background or creed, and the Lord has rewarded us by always giving us the money and resources whenever we need it for His work.
Five years ago, the Temple celebrated it's first Annual Maha Festival, culminating with the Ther (Chariot) Festival in July 1987. We felt that it had come to that stage, in the Temple's development, when this annual cleansing and

**சிற்றம்பலம் மேய செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே**

uplifting festival was needed to enhance the spirituality and positive vibrations of the Temple.

As with most things in our Temple, this event was planned simply and without too much pomp and circumstance! Our aim was to keep it as low key and as spiritual as possible. The priests set to work planning, in meticulous detail, the day by day, hour by hour order of prayers and poojas, that needed to be done in perfect harmony and in strict accordance with our holy scriptures. The help and support of gurus and fellow priests helped to boost their knowledge and expertise in planning such a precise and meaningful festival. Certain devotees were quietly approached and asked if they would like to take the responsibility of organising and sponsoring one of the 25 days of the festival - an invitation that they accepted with great joy and devotion. And so, the festival took shape - all the days were allocated and preparations began.

A simple chariot was constructed at the back of the Temple, protected from the elements and curious eyes, shrouded in a tent of steel and tarpaulin. Drawn by the noise of sawing and drilling, and the smell of fresh paint, the devotees were not allowed to look at the finished chariot until a few days before the start of the festival, when the beautiful 14ft wooden chariot, with traditional carvings and painted designs, festooned with coloured flags, was ceremoniously pulled to the front of the Temple. That year, we were totally unprepared for the outpouring of devotion that brought more than 2000 people to the Temple on the day of that first Ther Festival. That number of devotees, in a quiet residential area of Wimbledon, had not happened before. All came to see Lord Ghanapathy being pulled around the Temple perimeter, all felt the emotion of the moment, all wanted to have that very special darshan. For the Temple and it's devotees it was a wonderful moment of joy and spirituality, an overwhelming sense of oneness - all following the one path, following the one Lord as He was taken around His Temple to bless and purify the whole area. But for the residents of the locality, there was shock and horror as they watched devotees spilling onto the road and into their front gardens opposite the Temple, as they struggled to see our Lord. It took all the efforts of the Temple authorities, the volunteers and the local police, to ensure that the festival continued with safety and without major problems.

Soon after that first festival, the Temple authorities, the Police, the Residents Association and the Local Council all met to discuss the festival and solutions to the problems that had occurred. It was unanimously agreed that, with the full support of all present, we should take the chariot out onto the streets surrounding the Temple. My brother, with his experience in project management, was given the responsibility of planning and organising the route, the procession and the stewarding of this festival - a truly mammoth task. But with the Grace of Lord Ghanapathy, and the full support and backing of our Temple volunteers, such a high level of professionalism was achieved that it drew admiration from Senior Police Officers and Council Officials, who could not find fault with the planning, training of volunteers and preparation for the big day. Thus, on 2nd August 1998, Lord Ganesha was taken out of the Temple, onto the streets of Wimbledon, for the first time. There were more than 100 volunteer stewards, organised in groups and linked by walkie-talkies through a central radio control room. There was a fully equipped First-Aid Centre, run by experienced doctors, medical students and nurses, with the London Ambulance Service on stand-by, and there were more than 4000 devotees who came to have Lord Ganesha's darshan that day! Precisely at 10am, as planned, Lord Ganesha began his journey, carried aloft by a group of dedicated young men who had spent the last three weeks looking after Lord Ganesha and His Temple. As they lifted Him onto His chariot, the Nadaswaram and Thavil rising to a crescendo, tears of joy were shed by all who were part of this historic event. Everything went so smoothly, and we knew that Lord Ganesha had rewarded all the hard work and listened to all our prayers.

During His journey around the 4 roads surrounding the Temple, Lord Ganesha stopped in front of the houses of local devotees who were dedicated worshippers in His Temple, and they were given the special joy of having Him bless them and their houses. The traffic was stopped for Him, buses were re-routed and local residents came out to watch this amazing sight. The police, although present, remarked that they had nothing to do, because our volunteers had everything under control! And from that year onwards, the successful planning, training and running of our annual Ther Festival has become a shining example of co-operation and support between communities and local authorities.

Throughout the Temple's history, Lord Ganesha has been guiding and shaping the future of His devotees and His Wimbledon residence! Last year, more than 7000 devotees came to experience the spirituality of this very special day. This year, however many come, be assured that all will be done to ensure that the day is as wonderful and as spiritually fulfilling as can possibly be for the Lord's special devotees. We look forward to seeing you at the Festival and hope that we can make it a memorable day for all.

**தன் நெஞ்சு அறிவது பொய்யற்க**

We pray that His continuing Grace and Blessings will enable us to fulfil our vision of the future and help us to create a Temple that continues to serve the needs of our growing religious community, as well as helping to spread the great heritage and philosophy of Saivaism to the wider western community. May Lord Ghanapathy bless all who come to His Temple and continue to guide us all to do His work in the future.
Mrs. Geetha Maheshwaran,
Co-ordinator for Religious Education & Youth Activities

## SHREE GHANAPATHY TEMPLE

*125-133 Effra Road, Wimbledon, London SW19 8PU.*

Tel: 020 8542 7482 or 020 8542 4141

# ஆலய விபரங்கள்

(Service Bookings & Priest)
020 8946 1140 or 07956 284116 (General Enquiries in Tamil or English)
Fax: 020 8404 2888
Website
: http://www.ghanapathytemple.org.uk
e-mail info@ghanapathytemple.org.uk

### Opening Hours

7 Days a Week: 9am - 10pm
(open until 11pm on Fridays & Festival Days)

### Services

Daily Services: 10am, 12noon, 5pm & 8pm.
Special Abishekams (Ritual bathing of deity):
Fridays & Auspicious Days - 6.30pm,
Sundays - 11am,
other days by request.
Weddings, Punyavaachanams (House cleansing ceremony),
Funeral Services & Last Rites, Thivasam

(Death Anniversary Service) and
Blessing Ceremony for Babies - all by request.

Guided tours for schools, teacher-training colleges, other educational establishments and other religious groups, by appointment.

## SAI MANDIR

(a hall dedicated to Bhagavan Sri Sathya Sai Baba)
131-133 Effra Road, Wimbledon, London SW19 8PU.
Tel: 020 8946 1140 Fax: 020 8404 2888

Opening Hours
7 Days a Week: 9am - 10pm

Services
Group Devotional Singing: Sundays 3 - 4pm
Thursdays 7 - 8pm
Sai Spiritual Education Classes: Sundays 1.30 - 2.30pm

Festivals from the major world religions (including Buddhism, Christianity, Hinduism, Islam, Judaism & Sikhism) are celebrated with Group Devotional Singing on the actual day of the Festival.
Meditation Classes are conducted on the 4th Sunday of every month at 4.30pm.

Voluntary Work for the Community takes place throughout the year.



**ஓடுகின்ற பாய்மரத்தின் காகமானேன்**

# வேலையும் அதன் ரகசியமும்

**சுவாமி விவேகானந்தரது சொற்பொழிவுவின் தமிழாக்கம்**

நான் எனது வாழ்க்கையில் கற்றுக் கொண்ட வற்றிலேயே மிக முக்கியமானதாய்க் கருதுவது ஒரு வேலையைத் தொடங்கியது முதல் அது முடியும்வரை அதைச் செய்வதற்கான வழி முறைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பது தான். நான் இதைக்கற்றுக் கொண்டது ஒரு மாமனிதரிடம். அம் மனிதர் பெருமைக்குரிய பெரியவர். அவரே தன் வாழ்வில் இதற்கு நடைமுறை நிருபணமாக வாழ்ந்தார். நான் அந்த ஒரு தத்துவத்திலிருந்து பற்பல பாடங்களைக் கற்றுக்கொண்டேன். மேலும் எனக்கு வெற்றியின் ரகசியம் முழுவதும் அதில்தான் உள்ளது எனத் தோன்றுகிறது. அதாவது வேலையின் பயனை எவ்வளவு பெரிதாய் நினைக்கின்றோமோ அதே அளவு அதன் வழிகளிலும் கவனம் காட்ட வேண்டும்.

நம்வாழ்வில் உள்ள ஒரு பெருங்குறை என்னவென்றால் நாம் நமக்குக் கிடைக்கவிருக்கும் பயனைப் பற்றிப் பெரிதாய் நினைத்து அதன் உண்மையான அளவைவிட மிக அதிகமாகக் கற்பனை செய்து மனத்திலேயே கற்பனைக் கோட்டைகள் கட்டி அவ் வெற்றியை அடைய நாம் செய்யவேண்டிய முயற்சியை முழுவதுமாய் மறந்து விடுவதே ஆகும்.

ஆனால் நமக்குத் தோல்வி வரும் போதெல்லாம் நாம் நம் மனதில் அதைப்பற்றி நன்றாய் ஆராய்ந்தால் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது முயற்சிகளில் தோல்விகள் ஏற்படக்காரணம் நாம் வேலைக்கான வழிமுறைகளில் கவனமில்லாமல் இருந்ததே என்பது நன்கு விளங்கும். ஒரு செயலைச் செய்து முடிப்பதற்கு, அதை பலப்படுத்துவதற்கு அதற்கான வழிமுறைகளில் கவனம் செலுத்தவேண்டும். அதுவே நமக்குத் தேவை. ஒரு செயலுக்காக மேற்கொள்ளும் முயற்சிகளும் வழிமுறைகளும் சரியாகவும் பொருத்தமாகவும் அமைந்துவிட்டால் அதற்கான விளைவும் பயனும் தானே உங்களிடம் வந்து சேரும். முயற்சியோடு விதிமுறைகளில் நாம் காட்டும் கவனமே வெற்றியைத் தருகிறது என்பதை நம்மில் பலர் மறந்து விடுகிறோம். வெற்றி நம்மிடம் தானாகவராது. அதை அடைய எடுக்கும் முறையான முயற்சி எப்போது முழுமையாய் சரியாய் பலமானதாய் இருக்கிறதோ அப்போதுதான் வெற்றி வந்துசேரும். இல்லாவிட்டால் வெற்றியை அடையமுடியாது. நாம் செய்யும் வேலையையும் அதற்கான வழிமுறைகளையும் நாம் முடிவு செய்து விட்டால் பின்னர் நம் முழுக் கவனமும் வேலையை முடிக்கத் தேவையான வழிமுறைகளிலேயே பதிய வேண்டும். நாம் அப்போது வெற்றியைப் பற்றிச் சிறிதும் நினைத்துப் பார்க்கக் கூடாது. ஏனென்றால் நாம் வழிமுறைகளைச் சரியாக நிறைவேற்றி முன்னேறிக் கொண்டிருந்தோமானால் முடிவில் வெற்றி அங்கு நமக்காக காத்திருக்கும். முயற்சி இருக்குமிடத்தில் அங்கு வெற்றியைப் பற்றி வேறெந்தச் சிந்தனையும் தேவையில்லை. ஏனென்றால் வெற்றி தானாய் வரப் போகிறது. நாம் நம் முயற்சியில் கவனமாயிருந்தோமானால் விளைவை நம் முயற்சியே பார்த்துக் கொள்ளும். வெற்றிக்கான வழியே நாம் எடுக்கும் முயற்சி. வழி முறைகளே பின்னர் வெற்றியைத்தரும். ஆகையால் வழிமுறைகள் மேல் கவனமிருந்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும். இதுவே வாழ்க்கையின் மாபெரும் தத்துவம். உண்மையான ரகசியம். நாம் இதைக் கீதையிலும் முயற்சி செய் தொடர்ந்து உன்முழு பலத்துடன் வேலை செய் என உள்ளதைப் படிக்கிறோம். இவ்வாறு நாம் செய்யும்

**எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்**

வேலையில் பதிய வைத்து விடவேண்டும். அதே சமயத்தில் அதில் நாம் முழுமையாக மூழ்கி விடக்கூடாது. அதாவது நாம் ஒரு வேலையயைச் செய்யும்போது சிந்தனையில் மூழ்கி வேலையி லிருந்து விடுபடக் கூடாது. இருப்பினும் நாம் நினைத்த போது அவ்வேலையை உதறித் தள்ளவும் எப்போதும் தயாராய் இருக்கவேண்டும்.

நம்மில் பலருடைய வாழ்க்கையை ஆராய்ந்தால் துன்பத்திற்கான காரணம் இது தான் என்பது புரியும். அதாவது நாம் ஒரு வேலையை நம் முழு முயற்சியையும் செலவழித்துச் செய்தும் அம்முயற்சி தோல்வி யடைந்தால் நம்மால் அதிலிருந்து அப்போது விடுபட முடிவதில்லை. நம்மை அது புண்படுத்தும் என உணர்வோம். அதை மேலும் பற்றிக் கொண்டிருந்தால் நமக்கு அது துன்பம் தரும் என அறிவோம். ஆனாலும் நம்மால் அதிலிருந்து விடுபடமுடியாது. தேனீ தேனை எடுக்கவே வந்தது. ஆனால் அதன் கால்கள் தேனில் ஒட்டிக்கொண்டு அதனால் அதிலிருந்து விடுபடமுடியவில்லை. மீண்டும் மீண்டும் நாம் அத்தகைய ஒரு நிலையிலேயே நம்மைக் காண்கிறோம்.

அதுவே வாழ்க்கையின் முழு உண்மையும் ரகசியமும். நாம் இங்கு ஏன் இருக்கின்றோம். நாம் இங்கு தேனை எடுக்கவே வந்தோம். ஆனால் அத்தேனில் நம் கைகளும் கால்களும் மாட்டிக் கொண்ட நிலையையே பார்க்கிறோம். நாம் பிடிபட்டு விட்டோம். நாம் இன்பமடைய விரும்பினோம். ஆனால் மற்றவர்கள் நம்மால் இன்பமடைய நாம் கருவி ஆகிறோம். நாம் ஆட்சிபுரிய வந்தோம். ஆனால் நாம் ஆளப்படுகிறோம். நாம் வேலை செய்து வெற்றிபெற வந்தோம். ஆனால் வேலைசெய்ய வைக்கப்படுகிறோம். எப்பொழுதும் நாம் இதையே காண்கின்றோம். நாம் இதை நம்முடைய வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் பார்க்கிறோம். அது கடினமாயிருந்தும் நாம் மற்றவர்களின் விருப்பத்திற்கு வேலை செய்து கொண்டிருக்கிறோம். நாம் வாழ்வின் பயனை–யெல்லாம் அனுபவிக்க விரும்புகிறோம். ஆனால் அவை நம்மைத்தின்று விடுகின்றன. நாம் இயற்கையில் உள்ள அனைத்தையும் அடைய விரும்புகின்றோம். ஆனால் கால ஓட்டத்தில் இயற்கை நம்மிடமிருந்து எல்லாவற்றையும் பறித்துக்கொண்டு நம்மைத் தூக்கி எறிந்துவிடக் காண்கிறோம். இப்படி நடக்காமலிருந்திருந்தால் வாழ்க்கை நமக்கு ஒளிமயமானதாய் இருந்திருக்கும். கவலையில்லை. நாம் மட்டும் ஆசைப்பிடியில் அகப்பட்டுக் கொள்ளாமல் இருந்தால் வெற்றி தோல்விகளுக்கிடையேயும் இன்ப துன்பங்களுக் கிடையேயுங்கூட இந்த வாழ்க்கை ஒரே ஒளிமயமானனதாக இருக்க முடியும்.

இதுவே துன்பங்களின் முக்கிய காரணம். நம்மிடம் ஆசை குவிந்து கிடக்கிறது. ஆசைப்பிடியில் அகப்பட்டி ருக்கிறோம். அதனாலேயே கீதை தொடர்ந்து முயற்சி செய்யச் சொல்கிறது. ஆனால் அதே சமயத்தில் " பற்றுகளிடம் பிடிபடக்கூடாது. ஆசைப்பிடியில் அகப்படக்கூடாது" என்றும் சொல்கிறது. எதன் மீதும் நீ மிகுந்த பற்று கொள்ளமல் விரும்பியபோது அதை உதறித் தள்ளத் தயாராய் இரு. அது உனக்கு எவ்வளவு பிடித்தமானதாய் இருந்தாலும் இருக்கட்டும். அது உன் உயிருக்கு நிகரானதாய் இருந்தாலும் இருக்கட்டும். அதைப் பிரிந்தால் எவ்வளவு துன்பமாய் இருந்தாலும் பரவாயில்லை. நீ நினைத்தபோது உன்னை அதிலிருந்து விடுவித்துக் கொள்ளத் தயாராய் இரு. நினைத்ததைச் செய்யும் வல்லமை இல்லாதவர்க்கு எதிலாவது ஒட்டிக் கொண்டிருப்பவர்களுக்கு இங்கு இந்த உலகிலும் சரி வேறு எந்த உலகிலும் சரி, இடமில்லை. பலவீனமே

**மற்றவர்களை ஏமாற்றலாம் தன்னை ஏமாற்றமுடியாது.**
**மனச்சாட்சியின்படி நடந்து கொண்டுபோக எல்லாம் வலிய வரும்**

அடிமைத்தனத்திற்கு இழுத்துச் செல்கிறது. பலவீனமே அனைத்து நோய்களுக்கும் காரணம். அது மனநோயானாலும் சரி, உடலிலுள்ள நோயானாலும் சரி. நம்மைச் சுற்றிப் பல ஆயிரக்கணக்கில் நூற்றுக்கணக்கில் நுண்ணுயிர்கள் உள்ளன. நாம் பலவீனத்திற்கு இடங்கொடுக்காதபொழுது அவற்றால் நம்மை நெருங்கமுடியாது.அவை நாம் பலவீனமாய் மிகவும் சோர்ந்து போனால்தான் நெருங்கும். நம்மைச் சுற்றிக் கோடி நுண்ணுயிர்கள் இருந்தாலும் கவலையில்லை. அவை நம்மை நெருங்கமாட்டா. அவை நம்மை விட மேலானவைகளாய் ஆக முடியாது. நாம் மனம் தளராத பொழுது நெருங்கமுடியாது. இது ஓர் மிகப்பொரிய உண்மை. பலமே நிலையானது. என்றும் மாறாதது. குறையாதது. பலவீனம் என்றுமே துன்பம் தரும். பலவீனமே மரணம். நம் இன்பங்களுக்கொல்லாம் காரணம் இப்போது ஆசைப் பிடிப்புத்தான். நாம் நம் நண்பர்களுடன் உறவினருடன் வேகமான சுறுசுறுப்பான வேலைகள் ஆகியவற்றுடன் அன்பாய், ஆசையாய் விருப்பமுடன் இருக்கிறோம். அவை எல்லாம் நமக்கு மகிழ்ச்சி தருபவையானால் நமக்குத் துன்பத்தை அளிப்பது வேறு எது? அதே அன்பும் பற்றும் தான். நாம் தேவைப்படும்போது அவற்றிலிருந்து விடுபட்டாலேயே இன்பம் பெறலாம். எத் துன்பமும் இருக்காது. அத்தகைய ஒரு மனிதனே இயற்கையின் முழு இன்பத்தையும் பெறமுடியும். அவனே தன் முழு அன்பையும் ஒன்றின் மீது செலுத்திப் பின்னர் தேவை வரும் போது அதிலிருந்து விடுபடும் சக்தியையும் பெற்றிருப்பான். இதில் உள்ள கடினமான தத்துவம் என்னவென்றால் நமக்கு ஒரு பொருளின்மீது பற்று காட்டும் சக்தி எவ்வளவு உள்ளதோ அதே சக்தி அப்பொருளை உதறுவதற்கும் தேவை. உலகில் மனிதர்கள் சிலர் தங்களை எதிலும் பற்று கொள்ளாமல் வைத்துள்ளனர். அவர்களால் அன்பு காட்ட முடியாது. அவர்கள் கல் நெஞ்சக்காரர்கள். உணர்வில்லாதவர்கள். அவர்கள் வாழ்வில் பல துன்பங்களிலிருந்து தப்பிவிடுகின்றனர். ஆனால் ஒரு சுவரோ அல்லது ஒரு கல்லோ என்றும் துன்பப்படுவதில்லை. புண்படுவதில்லை. ஆனாலும் கேவலம் அது ஒரு சுவர். ஒரு சாதாரணகல். நிச்சயமாக ஒரு சுவரைப்போல் அல்லது கல்லைப்போல் இருப்பதைவிட பற்றுக்கொண்டு அதில் பிடிபட்டாலும் பரவாயில்லை. ஆகையால் அன்பில்லாமல் கல்லாக, கடினமான நெஞ்சுகொண்டு வாழ்வில் பல துன்பங்களைத் தவிர்த்து விடுபவர்கள் அதேசமயத்தில் இன்பங்களையும் மகிழ்ச்சியைங் கூடத் தவிர்த்துக் கொள்கிறார்கள். இழந்து விடுகிறார்கள். நமக்கு அது தேவையில்லை. அது தான் பலவீனம். அதுவே மரணம். எந்த ஒரு மனம் பலவீனத்தைப் புரிந்து கொள்ளாமல், துன்பப்படாமல் இருக்கிறதோ அது என்றும் விழிப்படையாமலே இருக்கும். நாம் அதை விரும்புவோமா? நமக்கு அது தேவையே இல்லை. அதே சமயத்தில் நாம் தெய்வங்களுக்கு உரிய சாதாரணமான ஆற்றல்களான அன்பு என்னும் அளப்பரிய ஆற்றல் மட்டுமோ. பற்று என்னும் அளப்பரிய ஆற்றலை மட்டுமோ. அன்பின் பேரால் நம்முடைய மழு மனத்தையும் ஒரு பொருளின் மேல் செலுத்துகின்ற அந்த ஆற்றலை மட்டுமோ விரும்பவில்லை. அப்படிச் செய்வதன் மூலம் நம்மையே இழந்து நம்மை நாம் அழித்துக்கொள்ளவும் விரும்புவதில்லை. ஆனால் நாம் இவற்றினும் மேலான ஆற்றலைப் பெற்று தெய்வங்களை விட மேலான நிலையில் விளங்க விரும்புகின்றோம். ஒரு முழுமையான மனிதன் தன் முழுமனதையும் ஒன்றின் மீது முழுவதுமாய்ப் பற்றுக் கொள்ளச் செய்து கொண்டு அதே சமயத்தில் அதனிடம் பிடிபடாமலும் அதன்மேல் தொற்றிக் கொள்ளாமலும் இருப்பான். இது எப்படி முடிகிறது? இதனை விளங்கிக் கொள்ள நாம் கற்றுக் கொள்ளவேண்டிய

**தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்**


வேறொரு ரகசியமும் இருக்கிறது.

ஒரு பிச்சைக்காரன் ஒரு நாளும் மகிழ்ச்சியாக இருப்பதில்லை. அவன் பெறுவது எல்லாம் வெறும் பிச்சை. அவன் பெறுகின்ற காசுக்குப் பின்னால் வெறும் பரிதாபமும் ஏளனமுந்தான் உள்ளன. குறைந்தபட்சம் ஒரு பிச்சைக்காரன் என்ற சாதரணமான கேவலமான மனிதன் என்ற நினைப்பே அக்காசின் பின்னால் உள்ளது. அவன் என்றுமே தான் பெறுவதில் மகிழ்ந்ததில்லை.

நாம் அனைவருமே பிச்சைக்காரர்கள் தான். ஏனென்றால் நாம் என்ன செய்தாலும் அதற்குப் பதிலாய் நாம் எதையாவது எதிர்பார்க்கிறோம். நாம் அனைவரும் வியாபாரிகள். நாம் தருமத்தில் வியாபாரிகள், நாம் மதத்தில் வியாபாரிகள், அடடா! நாம் அன்பு காட்டுவதில் கூட வியாபாரிகள்.

நீங்கள் வாணிபம் செய்யவந்தால், உங்களுடைய நோக்கமெல்லாம் எடுப்பதும் கொடுப்பதும், விற்பதும் வாங்குவதும் என்று மட்டுமே இருந்தால் அவற்றுக்கான விதிமுறைகளுக்குக் கட்டுப்படுங்கள். வியாபாரத்தில் நல்ல நேரமும் கெட்டநேரமும் இருக்கும். அங்கு விலைகளில் ஏற்றமும் இருக்கும் இறக்கமும் இருக்கும். அதில் எப்போதும் நீங்கள் அடிவிழுமோ என்று பயந்துகொண்டே இருப்பீர்கள்.

(இன்னும் வரும்....)






**G. KRISHNATHAS**
**Mg.Partner**

ATN JEWELLERY
Finest Quality 22ct. Gold & Diamond Jewellery

சகலவிதமான அமைப்புக்கள் கொண்ட புதுப்புது நகைக-ளை மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

TEl : 0208 521 9767
FAX: 0208 521 1281

37 Palmerston Road Walthamstow
London E17 6PR


**நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்**

720 ROMFORD ROAD
MANORPARK
LONDON
E12 6BT

TEL
0208 514 8188
FAX
0208 514 8303

# MARKANDAN & CO

## SOLICITORS

**Empowered to Administer Oaths**

## M. MARKANDAN. LLB

**All aspects of immigration matters from appeals to European court of human rights**
**All types of conveyancing**
**Litigation**
**All courts civil/criminal**
**Landlords/Tenant matters**
**Matrimonial**
**Police station advice**
**All D.S.S and housing benefit matters**
**LEGAL AID**

# Rani Fashions

**ஈ ஸ்ட்காமில் தமிழர்களின் மாபெரும் புடவைக் களஞ்சியம்**

## Specialist in Wedding sarees, Suites, Children Wears



எங்களிடம் திருமணத்திற்கான சிறந்த கூறைச் சேலைகள் காஞ்சிபுரம், அபூர்வா, றங்கோலி, கோலம் மற்றும் பலரக சாறிகள் கிளவுஸ் துணிகள் சுடிதார் குழந்தைகளுக்கான ஆடைகள் மற்றும் **immitation Jewelleries Ect.** நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளப்படும்.

**302 High Street North, Manor Park,**
**London E12 6SA**
**Tel: 0208 472 9970 Mobile: 0958 504 118**

**கூரம்பாயினும் வீரியம் பேசேல்**

# கனகதுர்க்கா என்னும் அமுதசுரபி

**1991ம்** ஆண்டில் உதயமாகி, கடந்த பத்து வருடங்களில், அடியார்களுக்கு அருள்தரும் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம் ஈழத்து இரத்த உறவுகளுக்கு அமுதசுரபியாய் அமுதம் சுரக்கின்றது. ஒத உலவா ஒரு தோழன் தொண்டர் உளன், என்று கூறிய மாணிக்கவாசகர் ஏழை பங்காளன் என்றும் இறைவனைப் பாடி இருக்கிறார். ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்கின்றேன் என்றார் சுவாமி விவேகானந்தர். சொந்தச் சகோரர்கள் துன்பத்தில் சாதல் கண்டு சிந்தை இரங்காரடீ என்றான் மஹா கவிபாரதி. இவ்வகையில் எமது அடியார்கள் அனைவரும் ஏழை பங்களாராக மாறியிருப்பது மட்டுமன்றி சொந்தச் சகோதரரின் துயர் துடைக்கவும் சிந்தை கொண்டிருப்பது விந்தையிலும் விந்தையே ஆகும்.

அடியார்களின் காணிக்கை அம்பாளை வந்தடையும் அதேவேளை அம்பாளின் பெட்டகத்தை அமுத சுரபியாகவும் மாற்றியுள்ளது. இன்று அமுதசுரபியின் ஊற்று ஈழ நிலத்தில் பெருக்கெடுப்பதற்கு எமது அடியார்களே மூலகாரணமாகின்றனர். அடியார்களின் அடியவராக நாங்கள் தொழிற்படுகிறோம்.

கடந்த எட்டு மாதங்களில் இது வரை 22500 பவுண்ஸ் பணத்தை கனகதுக்கா அமுத சுரபியிலிருந்து பெற்று எமது உடன் பிறப்புக்களுக்கு அனுப்பியுள்ளோம் என்பதை மிகவும் அடக்கமாக இங்கு குறிப்பிடவிரும்புகிறோம்.

இந்த விபரங்களை இங்கே தருகிறோம்

**கார்த்திகை – 2000**

வன்னி மாவட்டத்தில் தொழிற்படும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் **5000 பவுண்கள்**

**மார்கழி–2000**

தெல்லிப்பழை துர்க்கா புரம் மகளிர் இல்லம்– யாழ்ப்பாணம் 1200

யோகர் சுவாமிகள் திருவடி நிலையம்– முதியோர் இல்லம் கிளிநொச்சி– 500

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவை நிலையம்– வன்னி மாவட்டம் 1000

இந்து இளைஞர் பேரவை– கிளிநொச்சி 1000

யோகர்சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம் கிளிநொச்சி– ( இரண்டாம் தடவை)– 500

**தை–மாசி 2001**

மட்டக்களப்பு மங்கையர்க்கரசி மகளிர் இல்லம்– 750

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம் – யாழ்ப்பாணம் 1500

S.C.O.T அமைப்பு ஊடாக யாழ்ப்பாணப் பிரதான வைத்தியசாலைக்கு– 500

மட்டக்களப்பு திலகவதியார் மகளிர் இல்லம் – 750

**மாசி பங்குனி–2001**

மட்டக்களப்பு மங்கையர்க்கரசி மகளிர் இல்லம்– 3000

**இடர்தனைக் கழிக்க வேண்டில் இறைவனை ஏத்துமின்கள்**

**வைகாசி—ஆனி 2001**

வன்னி மாவட்டம்— பகவான் ஸ்ரீ சத்தியசாயி அனாதைச் சேவைநிலையம்— 1000

கிளிநொச்சி இந்து இளைஞர்பேரவை— 500

கிளிநொச்சி—யோகர் சுவாமிகள்—திருவடி நிலைய முதியோர் இல்லம்— 500

இலங்கையில் கழுத்துறைச் சிறையிலும் ஏனைய தென்பகுதிச் சிறையிலும் வாடும் எமது தமிழ் உறவுகளுக்கு உதவிக்கரம்— 1000

கிளிநொச்சி—ஸ்கந்தபுரத்திலுள்ள மகாதேவா ஆச்சிரம அனாதைகள்— 900

அக்கரைப்பற்று— விபுலானந்த அனாதைப் பிள்ளைகள்— 900

ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூசணி—தேவஸ்தான அனாதைகள் பராமிரிப்பு— 1000

எமக்கு ஆதரவு கேட்டு, எமது தாயகத்தில் இருந்துவரும் கடிதக்கோவைகளை அறங்காவலர் சபையும் நிர்வாகசபையும் ஒருங்குகூடி ஆராய்ந்த பின்னரே எவ்வெவ் அமைப்புகளுக்கு நிதியை அனுப்புவது என்பது பற்றி முடிவு செய்கிறோம். இந்தப் பரிசீலனையை மிக அவதானமாகக் கையாளும் அதேவேளை எவ்வித பக்கச்சார்புமில்லாது நடு நிலையிலிருந்தே நாங்கள் முடிவெடுக்கின்றோம். இவை பற்றிய கடிதங்கள் பற்றுச்சீட்டுக்கள் ஆகிய விபரங்களை திறந்த புத்தகமாக, ஆலயத்தில் பார்வைக்கு வைத்திருக்கின்றோம். நாங்கள் நிதியை அனுப்பிய நிலையங்களிலிருந்து வந்துள்ள புகைப்படங்களை அடியார்களின் பார்வைக்காக விளம்பரப் பலகையில் வைத்திருக்கிறோம்.

எமது ஆலயத்தின் புதிய கொடிஸ்தம்பப் பிரதிஷ்டை இம்மாதம் பதினைந்தாம் திகதி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இம்மாதம் 20—7—2001 அன்று கொடியேற்ற வைபவம் ஆரம்பமாகி, தொடர்ந்து 25 நாட்கள்வரை காலை, மாலை வேளைகளில் கிரியைகள், பூசைகள் என்பன நடைபெறவுள்ளன. ஈழத்தின் பிரசித்தி பெற்ற சிவாகம கலாநிதி சிவஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள் தலைமையில் ஆலய அந்தணர்களும் இணைந்து பூசைகளை நெறிப்படுத்த உள்ளனர்.

12—8—2001 ஞாயிற்றுக்கிழமை காலை பத்தரைமணியளவில் இரதோற்சவத் திருவிழா நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு தினப்பூசைக்காட்சியும் கண் கொள்ளாக் காட்சியாக அமையப்போகின்றது. ஈழத்து தமிழருவி சிவகுமாரன் அவர்களும், தமிழகத்து பேராசிரியர் அருணை பாலறாவாயன் அவர்களும் விசேடசொற்பெருக்காற்றவுள்ளனர்.

வருகிறவருடம் புதிய சித்திரத் தேரை அமைக்க, அம்பாள் கடைக்கண் பார்வைகிட்டும் என நம்புகிறோம். அடியார்கள் சிறப்படையப் பிரார்த்திக்கின்றோம். வாழ்க சீரடியார் எல்லாம்.

**ச—சிறீரங்கன் ( தலைவர்—அறங்காவலர்சபை )**

**சொ—கருணைலிங்கம்( தலைவர்— நிர்வாகசபை )**

**நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்**

# வியாழன்

வியழனுக்குக் குரு என்றும் பிருஹஸ்பதி என்றும் சிறப்புப் பெயர்கள் உண்டு. பிரஹஸ்பதி என்றாலே அறிவில் மிகச் சிறந்தவன் என்ற அர்த்தம் தொனிக்கும் நவக்கிரகங்களில் தலைசிறந்தவராகக் கருதப்படுகிறார்.

பிரஹஸ்பதி–தேவர்களுக்குத் தலைவராகவும்–குருவாகவும் இருப்பவர். பிரம்மாவுக்கும் பிடித்தமானவர்.

மிகச் சிறந்த தபஸ்வியான அங்கீரச முனிவருக்கும் சிரத்தா தேவிக்கும் புதல்வராக உதித்தவர் வியாழ பகவான். இவருடைய ஸ்வரூப லக்ஷணம் மிகவும் அற்புதமானது. விந்திய மலைக்கு மேல் குருவிற்கு ஆஸ்ரமம் உண்டு. ஸிந்து தேச அதிபதியாக இருப்பவர். அங்கீரஸ கோத்திரம் இவருடையது. வடக்கு ஈசான்ய திக்குகளுக்கு அதிபதி. புஷ்பராக மாலையை அணிந்து கொண்டிருப்பார். தண்டம் கமண்டலம் அக்ஷமாலை வரத ஹஸ்தம் உடையவர். எட்டுக் குதிரைகள் பூட்டிய தேரில் மேரு மலையை வலம் வருபவர். இவருடைய நன்மதிப்பைப் பெறவேண்டுமானால் இந்திரனையும் பிரம்மாவையும் வழிபடவேண்டும்.

சூரியனுக்கு வடக்கில் நீளமான சதுர மண்டலத்தில் வடக்கு முகமாக வீற்றிருப்பவர். பாஷைகளில் சமஸ்கிருதத்தைத் தன்னுடையதாகக் கொண்டவர்.

குளுமையான வஸ்துவில் மிகப் பிரியம் உண்டு. குரு என்ற சொல்லுக்கு அஞ்ஞானத்தைப் போக்குகிறவர் என்ற பொருள் உண்டு. ஜோதிடசாத்திரத்தில் குரு என்றால் வியாழ பகவானையே குறிக்கும். குரு மூலம் யாராவது எந்த மந்திரத்தையாவது பெற்று தினமும் ஜபித்துவந்தால் அவர்களுக்கு சந்தோஷத்தையும் பணத்தையும் கொடுப்பவர்.

பசுமாட்டை ரக்ஷிக்கின்ற இடத்தில்– குருபகவான் பிரத்தியட்சமாகக் காணப்படுவதாக சொல்லப்படுகிறது. ப்ரதிதேவோ ஜ்வலக்ரஹம் என்று வியாழபகவானுக்குச் சொல்வார்கள். இதன் அர்த்தம் நம் மனதில் பிரதிபலிக்கின்ற தே ஜோமய ஸ்வரூபத்தைக் காட்டுகிற கிரகம் எதுவென்று கேட்டால் அது குருபவகவானுக்கு மண்டலமென்று பளிச்சென்று சொல்லிவிடலாம்.

குருவிற்கு ஐந்து சகோதரர்கள். பிருஹத் ஜோதிஸ், பிருஹத் பிரும்மா, ப்ருஹன் மநஸ், பிருஹன் மந்திர, பிருஹத்பாஸ என்பவர்கள் அவர்கள்.

பானுமதி குருவின் சகோதரி ஆவாள்.

பிருஹஸ்பதியாகிய குரு பகவான் தாரா என்பவளை மணந்து கொண்டார். இவர்களுக்கு சம்யூநிஸ்யவன், விஸ்வஜித். விஸ்வபுக், வடபாக்னி, ஸ்விஸடக்ருதி– என்ற புத்திரர்களும் உண்டு. ஸ்வாகா என்ற பெண்ணும் உண்டு. ஒரு முறை பரீட்சித்தின் குமாரனாகிய ஜனமேஜயன் ஒரு பெரிய யாகம் செய்ய விரும்பினார். அதற்கு சர்ப்ப யாகம் என்று பெயர்.

அப்படி அந்த யாகத்தை ஜனமே ஜயன் செய்தால் உலகத்திலுள்ள பாம்புகள் எல்லாம் அழிந்து போகும். என்பதை உணர்ந்த குருபகவான் ஜனமே ஜயனின் சர்ப்ப யாகத்தைத் தன் அறிவாற்றலால் தடுத்து நிறுத்தினார். ஒரு சமயம் இந்திரன் தெய்வத்தின் திருவருளை வேண்டித் தீவிரமான தியானத்தில் ஈடுபட்ட பொழுது–தேவர்களுக்குச் சங்கடம் வந்தது. அசுரர்கள் அளவுக்கு மீறி ஆட்டம் போட்டனர்.

இந்த நிலை நீடித்தால் என்ன ஆகுமோ என்று தேவர்கள் பயந்து பிருஹஸ்பதியான வியாழ பகவானிடம் வந்து முறையிட்டனர். குருபகவான் இந்திரனைத் தன் சாமர்த்தியத்தால் சுயநிலைக்கு கொண்டு வந்தார். தேவர் குலம் பிழைத்தது.

குருவுக்கும் சுக்கிரனுக்கும் பல விதத்தில் கருத்து வேறுபாடு உண்டு. இருந்தாலும் குருவின்

**நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே**

மகனாகிய அசன் என்ற விஸ்வஜித் சுக்கிரனிடம் மாணவனாகச் சேர்ந்து சஞ்சீவினி என்னும் வித்தையைத் தெரிந்து கொண்டான்.

குருபகவான் காசியில் வெகுகாலம் தங்கியிருந்து அங்கே ஒரு லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார். அது மட்டுமல்ல அந்த லிங்கத்தின் அருகேயே இருந்து பதினாயிரம் தேவ ஆண்டுகள் பூஜித்து—தவம் செய்திருக்கிறார்.

குரு பகவானின் தவத்தைக் கண்டு மகிழ்ந்து அவர் முன்னே காட்சி தந்த சிவபெருமான் மிகப்பெரிய தவத்தைச் செய்து—உன்மனதை இந்த லிங்க தியானத்திலே நிறுத்திய சாதனைக்காக நீ நித்திய ஜீவனாக என்றென்றும் புகழ்பெற்று விளங்குவாய். அதுமட்டுமல்ல உன்னுடைய திறமை—அறிவாற்றல் குணங்களினால் இன்று முதல் நீ இந்திரனுக்கும் குருவாக விளங்கக்கூடிய பாக்கியம் பெறுவாய் என்று வரம் கொடுத்தார்.

பிருஹஸ்பதி பொன் வண்ணமேனியர் நான்கு திருக்கரங்கள் உண்டு. கமண்டலம் அக்ஷமாலை யோகதண்டம் அபயம் என்பவற்றை அந்தக் கரங்களில் காணலாம். விஷ்ணு தர்மோத்திரம் எனும் நூலில் பிருஹஸ்பதி இரண்டு கரம் உடையவர்தான் என்றும் அவற்றில் புத்தகமும் அட்சமாலையும் ஏந்திக் கொண்டிருப்பார் என்றும் செய்தி குறிப்பிட்டிருக்கிறது.

சாந்தமூர்த்தியாகத் திகழும் குருபகவான் சதுரமான பீடத்தில் இருப்பவர். கிழக்கு நோக்கி இருப்பவர். முடியுடையவர். பொன்னிறத்தினர். பொன்னிறச் சந்தனம் பூசுபவர். பொன்னிற மலர் பொன்மாலை பொன்னாடை பொற்குடை பொன்னிறச் துவஜம் கொண்ட காட்சி அளிப்பவர். குருவின் அதிதேவதை பிரம்மன். பிரத்யதி தேவதை இந்திரன் ஆகும். நீதிஜ்நக நீதிகாரகர், தாராபதி, கிரகபீடாஹாரகர் ஸெம்யமூர்த்தி த்ரிலோகேசர், லோகபூஜ்யர், கிரகாதீசர் என்பவை வியாழ பகவானைக் குறிக்கும் சொற்களாகும்.

ஏழைக்கும் இரங்குபவர் பரை, பைசந்தி, மத்திமை, வைகரி, என்ற நான்கு வகை வாக்குகளின் உருவை விளக்கிக் காட்டியவர். கருணைக்கடல். தூயவர் நீதிசாஸ்திர ஆசிரியர், களங்கமற்றவர் என்றெல்லாம் குரு பகவானைப் பெருமையுடன் சொல்லுவதுண்டு.

பிருஹஸ்பதி என்ற நீதி நூலில் எழுதியிருப்பதாவது நகுஷன் என்ற அசுரன் இந்திரன் மனைவியாகி இந்திராணியைக் கவர்ந்து அவளைத் தன் மனைவியாக்கிக் கொள்ள விரும்பினான். செய்தியை அறிந்து குருபகவான் நகுஷனை சப்தரிஷிகள் சுமக்கும் பல்லக்கில் ஏற்றித் தன்னிடம் வரச் சொன்னார். தேவர்களின் குருவே தன்னை மதித்து சப்தரிஷிகளை அனுப்பி அவர்கள் தூக்கும் பல்லக்கில் வரச்சொன்னதைக் கர்வம் கொண்டு திமிர் பிடித்து வந்தபோது தன் சக்தியால் நகுஷனைப் பாம்பாக மாற்றிக் காட்டில் அலைய விட்டார் குருபகவான்.

குருவின் பார்வை ஒருவனுக்குக் கிடைக்குமானால் அவன் மூடனாக இருந்தாலும் அறிவாளியாக விளங்குவான். விஷ்ணு தர்மோத்திரத்திலுள்ள ஒரு ஸ்லோகம் குருவிற்காக உள்ளது. இந்த ஸ்லோகத்தை தினமும் காலையில் எழுந்து பக்தி சிரத்தையோடு சொன்னால் அவர் குருபகவானின் பேரருளைப் பெறுவார்.

**பிருஹஸ்பதி ஸீராசர்யோ தயவான் சுபலக்ஷண லோகத்ரய குரு ஸ்ரீமான் ஸர்வஞ்ஞ ஸர்வகோவித ஸர்வேச ஸர்வா தீபீஷ்ட ஸர்ஜித்சர்வ பூஜித அக்ரோதனோ முனி சிரேஷ்ட நீதிகர்த்தா குருபிதா விச்வாத்மா விச்ச ஆரித்தா விச்வயோனிரயோனிஜ பூர்வு வஸ்ஸுவ பிரபுச் சைவ பர்த்தாசைவமஹாபல**

இந்த அற்புதமான ஸ்லோகத்தைக் கிருஷ்ண பகவான் நந்தகோபன் வீட்டில் கூறியதாக வரலாறு. குருபவான் இந்த பூலோகத்தில் வந்து இறைவனைப் பூஜித்த திருத்தலங்களில் மூன்று மிகவும் குறிப்பிடத்தக்கவை. அவையாவன தென்குட்டித்திட்டை ,திருச்செந்தூர் திருவலிதாயம்.

(முற்றும்)

பாம்பின்வாய்த் தேரைபோல பலபல நினைக்கின்றேனே

KUMARANS

Imports & Exports

KUMARANS

# குமரன்ஸ்

*Imports & Exports*

உங்களுக்கு அன்றாடம்
தேவையான லீலா தயாரிப்புப்
பொருட்களை மொத்த விற்பனை
விலைக்குத் தொகையாக வாங்கி
சிக்கனமடையுங்கள்.

**FREE PARKING AVAILABLE FOR OUR CUSTOMERS**

**KUMARANS LIMITED**
**142-144 HOESTREET**
**WALTHAMSTOW, LONDON E7 4QR**

**TEL:**
**0208 530 3033**
**0208 521 4955**
**0208 521 4411**

**FAX:**
**0208 530 5655**
**0208 521 9482**

**லீலா தயாரிப்புகளின்**
**அங்கீகாரம் பெற்ற**
**விநியோகஸ்தர்கள்**


**வேண்டுவார் வேண்டுவதே ஈய்வான்கண்டான்**

# சிறுவர் கலசம்

வணக்கம்!

பெற்றார்களே! இளையவர்களே!

இந்தப்பகுதி இளையவர்களாகிய உங்களுடையதே! இதனில் பங்கு கொள்ளவேண்டியமை உங்கள் கடமையே! இது பற்றிய அபிப்பிராயங்களை அறிந்து கொள்ள அவாவுடையோம்! இம்முறை மகாபாரதக் கதையை ஆங்கிலத்தில் தருகின்றோம். இது தொடராக வெளிவரும் . படித்துப் பயனுறுங்கள்

# MAHABHARATHAM

## *Bhishma's Vow*



This is not a recent story. It is a very ancient story which occured thousands of years ago.

Santanu was the king of Hastinapur. He was wise, kind and just. All his citizens loved him and respected him. The river goddess Ganga was santanu's first wife. Santanu had met Ganga at the river bank, fallen in love with her and proposed marriage to her. But then, Ganga had laid down certain conditions to say 'yes' to his proposal and had warned him that whatever she did, he was not to counter-question her. So desperate was the king to marry her that without a moment's hesitation, he agreed to obey her conditions.

Ganga was a beautiful woman. She was also a devout wife and looked after the king with love and affection. They were so happy that Santanu even forgot that year had already passed. He also forgot about



his promise to Ganga. Meanwhile Ganga gave birth to a baby boy.The king's happiness knew no bounds as he fondly looked at his heir. But his joy was short-lived. The same night Ganga carried the baby and headed towards the river.Santanu was perplexed. So he followed her. By the time he could realise her intentions she had thrown the baby into the river.Santanu was about to ask her the reason for her attitude when he remembered his promise to her at the time of her marriage.He could not question her about anything.Both of them returned to the palace silently.

Even after this incident,Santanu's love for Ganga did not dimirish in any way.But he was pplexed about her behaviour.How could she kill her own child?Was she a demon or a human, he wondered. Nevertheless, he decided to forget about this incident and continued to lead a happy life with Ganga.Subsequently,Ganga gave birth to another baby boy.the baby met a similar fate as the first born,Santanu turned pale with worry.But still,he did not have the courage to question Ganga. He felt very sad and depressed.

Ganga gave birth to seven babay boys,one year after another.But all the babies were thrown into the river a few hours after their birth.And it was none other than their own mother who killed them.

When Ganga gave birth to a baby boy for the egihth time , Santanu could no longer bear the situation.By then, he had already been a dejected man.When Ganga was about to throw the newborn into the river,Santanu stopped her and asked her, 'Do you know what you are doing?Are you a demon or a devil?You have killed seven sons of ours.I can no longer bear it.I will save atleast this child. 'I will not live with you even for another moment', she said.Santanu loved Ganga very much.He was greif-striken.He begged and pleaded with her not to desret him.But Ganga told the king that she had to return to her abode as she had fulfilled her task upon



She then explained to santanu what her task was.

Long ago,there were eight demi-gods known as Ashta-Vasus.Once,put of sheer greed,they wanted to steal Sage Vashista's cow and the yougest of them,by name Prabhasa had stolen the cow. Vashista was enraged at this and cursed them to be born as human beings upon the earth. When the vasus sought to be forgiven, the sage relented and laid down that the seven vasus could live only for a few hours upon the earth but Prabhasa was to lead his entire life upon the earth. These Ashta-Vasus were the babies born to Ganga. The seven Vasus were thrown into the river and Prabhasa was the only survivor.

Ganga narrated this episode to Santanu and disappeared after promising him that she would hand over Prabhasa to his care subsequently.

Seven years later , Santanu witnessed a young lad practising archery by the river side. A strong feeling attracted him towards the boy. At that moment, Ganga appeared before the king and told him, "Here is your son Devavrat; He is not an ordinary person. He will earn fame as a great man. Look after him well". She then returned to her abode.

Santanu was immensely happy. Hugging the child, his heart swelled with love and affection. He took the boy to the palace and reared him well.

Devavrat grew up to be a brave and courageous boy. Santanu had appointed a master for him,. Devavrat thirsted for knowledge and excelled himself in all fields of eduaction. As a true Kshatriya, he also perfected warfare and was hailed as the mightiest all. At the oppurtune time, Santanu crowned Devavrat as the heir-prince.

மங ்கலமென ்ப மனை மாட்சி

In the meanwhile, Santanu had gone on a hunt and near the river he saw an extremely beautifol girl. She was the daughter of Dasaraja, a fisherman. Santanu fell in love with her and sent a messenger to her father asking her hand in marriage.
"I am prepared to have my daughter wed the king" said Dasaraj, "But I have a condition" he added,i want my daughter to be the queen and the child born to her as the future king.If your king dosen't agree to this,ask him to forget about marrying my daughter'.
Santanu was worried.He found it impossible to live without Satyavati,Dasaraja's daughter.but how could he marry her? For he had alrady crowned Devavrat as the heir to the throne. There were none to equal Devavrat for the throne.Santanu decided not to accept the condition laid down by Dasaraja.but he felt very depressed about losing Satyavati.
Devavrat knew his father's state of mind.So he met Dasaraja and pleaded with him to get Satyavati married o the king.Dasararja was adamant. "Are you prepared to give up the throne for the sake of your father's happiness?" he asked.Devavrat did not hesitate. "if it can bring happiness to my father,I do not want the throne. I am prepared to give it up.I swear", he said.But Dasaraja was not convinced. He asked Devavrat.

"O! Devavarat, it is easy for you to say that you do not want the throne.But you will get married and have children.Later on,your children will also have children. And if they claim their right over the throne,what will be the fate of Satyavati's children?"
Devavrat agreed with Dasaraja's thinking.He felt that it was a fair question. He thought for a while and said "Respected Sir, have no doubts about this.I hereby swear that I will be a bachelor throughtout my life. I will never get married."
This decison by young Devavrat to lead his life all alone,for the sake of his father's happiness drew appreciation from all the suras.This vow came to be known as 'Bhishma'.
Devavrat returned to the palace and performed the marriage of satyavati to his father.In the presence of hundreds of citizens,he again proclaimed that he was giving up his rights to the throne.Highly pleased with his son,s sacriffice, Santanu embraced Bhishma and blessed him as '*Iccha Marani*".
"'Let not death near you as long as you want it", he wished.

Bhishma has lived through the ages as a great son of India.

(will be continued..)

**அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது**




**கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு**




**பணிவுடையன் இன்சொலான் ஆதல் ஒருவற்கு அணி**




**வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை**




**தீதும் நன்றும் பிறர்தர வாரா**

# காலாண்டுக்கொருபாடல் இரு மொழியிற் கருத்துடன் தருவோம்

அன்பினானடியே னாவியோடாக்கை
யானந்தமாய்க் கசிந்துருக
வென்பரமல்லா வின்னருடந்தா
யானிதற்கிலனோர் கைம்மாறு
முன்புமாயப்பின்பு முழுதுமாய்ப்பரந்த
முத்தனே முடிவிலாமுதலே
தென்பெருந்துறையாய் சிவபெருமானே
சீருடைச் சிவபுரத்தரசே

(கோயிற்றிருப்பதிகம்)

With love Thy servant;s body and soul melting in bliss, Sweet grace, by me not deserved, Thou didn;t grant. For this I have naught to give in return. Thou that didn;t spread forth as all before and all after, Free One, Substance eternal, Dweller in the great southern shrine, Lord Siva, King of the beauteous city of Siva.

**தனிமரம் தோப்பாகாது**

# ஓங்காரமும் பிரபஞ்சமும்

-திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம்



இந்துக்களின் மிகப்பழைய சமய நூலாகிய இருக்கு வேதம் ஓம் எனும் ஓங்கார ஒலி பற்றிப் போற்றுகையில் ஆதியில் பரப்பிரம்மம் (பரம்பொருள்) ஒன்றே இருந்தது. அந்தப் பரம்பொருளில் ஏற்பட்ட அதிர்வினால் ஓம் என்ற முதல் ஒலி ஒலித்தது. அதனால் ஓம் என்ற ஒலியும் அந்தப் பரம்பொருளே எனப் போற்றி அருளும்.

அதனால் பரம் பொருளின் முதல் ஒலியான ஓங்காரமே அனைத்துப் பிரபஞ்ச விரிவிற்கும் காரணமாயிற்று என இந்து சமயம் கூறும். ஓம் ஒலி பிரபஞ்ச உற்பத்திக்கு மட்டுமன்றி பிரபஞ்ச இயக்கத்திற்கும், முடிவுக்கும் காரணமாயிருக்கின்றது.

அதனால் பிரபஞ்சச் செயற்பாடுகள் அனைத்தும் ஓங்காரத்தின் செயற்பாடு என்பது புலனாகிறது. பிரபஞ்சத்தில் காணப்படும் அத்தனை பொருள்களிலும் அதிர்வு சக்தியாக மறைந்திருப்பது இந்த ஓம் ஆகிய மூல ஒலியேயாம். இந்த உண்மையைப் பௌதிக ஆய்வுகளும் நிரூபணமாக்கியுள்ளன. அணுக்களில் காணப்படும் இயல்பான அதிர்வுகளும் அவற்றின் உள்ளே உறைகின்ற மின்னணுக்களின் எதிரொலிகளும் எமக்குணர்த்துவது பிரபஞ்சம் சடப்பொருளாலன்றி ஒலித் தொகுதிகளால் இயற்றப் பட்டது என்பதாகும் எனக்கருதுவர்.

டொனால்ட் ஹச் மேலும் அணுக்களில் உள்ள அதிர்வுகள், எதிர் அதிர்வுகள் யாவும் அந்தப் பரம்பொருளின் ஈதல் ஒலியாக உள்ளவை ஓங்காரத்தின் நுண்பகுதிகளே என்பதனை இன்றைய விஞ்ஞான ஆய்வுகள் துல்லியப்படுத்தியுள்ளன. ஹன்ஸ்ஜெனி என்பவர் நுண் தொலைபேசியில் பேசிய பேச்சுக்களுக்கு மாற்றி அமைக்கின்ற ஒலிப்பேழையை இயக்குகையில் அது முதலில் ஓங்காரத்தை ஒலித்திருந்தமையை அவதானித்திருக்கின்றார். இருக்கு வேதம் பரம் பொருளின் சக்தி ஒலிவடிவாய் வெளியாயிற்று என்பதனால் அச் சக்தியே எல்லா இயக்கங்களையும் நிகழ்த்தி நிற்கின்றது என்பது உறுதியாகின்றது. இவ்வாறு முக்காலங்களையும் கடந்த ஓங்காரமும் பரம்பொருளின் செயற்பாடுகளை எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

மண்டூக்கிய உபநிடதம் ஓங்காரத்தின் நால்வகை நிலைகளைப் பரம்பொருளின் நிலைகளாகக் கூறும். முதலாவதாக ஓம் ஒலியின் அ, உ, ம் எனும்

**முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்**

தனித்துவ ஒலி நிலையில் ஒவ்வொன்றும் தனித்து இயங்குகையில் அ ஒலி பிரபஞ்ச உற்பத்திக்கும்

இரண்டாவதாக உ ஒலி பிரபஞ்ச இயக்கத்திற்கும் மூன்றாவதாக ம் ஒலி பிரபஞ்ச ஒடுக்கத்திற்கும் காரணிகளாகின்றன. நான்காவதாக ஓம் எனும் முழுமையான ஒலி ஒன்றேயான இரண்டற்ற பரம்பொருளின் முழுமையை உணர்த்துவதனால் அது பரம்பொருளே எனக் கூறுகின்றது. சாந்தோக்கிய உபநிடதம் ஓங்காரத்தை உத்கீதம் (மேலான இசை) எனப்போற்றி அதன் பெருமைகளைக் கூறியருளும் ஓங்காரத்திலிருந்தே வேதங்கள் வெளிப்பட்டமையினால் ஓம் எனத்தொடங்கியே வேதமந்திரங்கள் உச்சரிக்கப்ப டுகின்றன. பரம் பொருளின் ஒலியாகையால் அதனை மந்திரங்கள் முன் வைத்து உச்சரிப்பது அந்தப் பரம்பொருளைப் போற்றித் துதிக்கவேயாம். இன்னும் சுழலும் பூமியின் ஒலியுட்பட அகிலத்தின் அனைத்து ஒலிகளும் ஓங்காரத்தையே ஆதரமாகக் கொண்டவை. மனிதன் பேச்சொலிகளும் இலைகள் எவ்வாறு நரம்பினால் நன்கு ஊடுருவி வியாபிக்கப்பட்டிருக்கின்றனவோ அவ்விதமே ஓங்காரத்தினால் ஊடுருவி வியாபிக்கப்பட்டி ருக்கின்றன.

மேலும் ஓங்காரம் பரம்பொருளின் பூரண நிலை-யைப் பிரதிபலிப்பதனால் இந்தப் பூரணத்திலிருந்து தோன்றுகின்ற அனைத்தும் பூரணமேயாம் அதனால் பரம்பொருளின் நாத வடிவான ஓங்காரத்தைப் பரம்பொருளின் முழுமையை உணர்த்தும் பூரண ஒலியென உணரவேண்டும். அதனாலே இந்துக்கள் ஓங்காரத்தை மந்திரங்கள் யாவற்றிற்கும் முன் வைத்து மூலமந்திரமாகப் போற்றி உச்சரிக்கின்றனர். இத் தெய்விக ஒலியைத் தனியே இசைப்பதனால் அலையும் மனம் பரம்பொருள் மீது ஒருமுகப்பட்டு நிலைபெறுகின்றது. ஓங்காரத்தை இசைக்கும் பொழுது பரம்பொருள் உறையும் மனித இதயத்தின்நாடிகள் அத்தனையும் செயற்படுகின்றன. மனம் செயலற்றுப்போகும் வரை ஓங்காரத்தைக் குணம் குறியற்ற பரம்பொருளாகிய தனிமுதலை அடையவேண்டும் என இந்துசமய நூல்கள் அறிவுறுத்துகின்றன.

மேலும் சிவசக்தி ஐக்கியத்தால் எழும்பிய இந்த நாதத்தை பரநாதம் என்றும் பிரணவம் என்றும் அழைப்பர். இந்தத் தெய்விக ஓசையில் கூடியுள்ள அ உ ம் ஒலிகள் முறையே படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய தொழில்களைச் செய்கின்ற பிரம்மா விஷ்ணு சிவன் ஆகிய தெய்வங்களின் தொழில் நிலைகளைக் குறிப்பதனால் இத்தெய்வங்களுக்குரிய பொது ஒலியாகவும் விளங்குகின்றது. அதனோடு அ உ ம் என்ற ஒலி நிலைகள் உயிரின் விழிப்பு கனவு உறக்க நிலை-களைப் பிரதிபலிப்பதாகவும் கருதப்படுகின்றது.

ஓம் என்ற ஒலியின் வடிவமானவர் கணபதி எனப் பதஞ்சலியோகசூத்திரத்திம் கூறுகின்றது சிறப்பாக வடமொழி ஓம் எழுத்தைக் காட்டிலும் தமிழ் மொழி ஓம் எழுத்து கணபதியின் முக வடிவில் அமைந்திருப்பதனை நாம் ஈண்டு நினைவு கூரலாம். இவ்வாறு ஓங்கார வடிவமானவர் கணபதி என்பதனால் அவரை ஓங்கார கணபதி ஓங்கார பிரணவ ரூபன் ஓங்கார பிந்து ரூபன், ஓங்கார நாதன், ஓங்கார மந்திரன், ஓங்கார மயன் ஓங்கார மூலாதாரவாசன், ஓங்கார மூர்த்தி என்றெல்லாம் ஸ்ரீ கணபதி மூலமந்திரம் போற்றுகின்றது. பிரம்மம் என்றால் ஒலி (ஓங்காரம் பரம் பொருளின் ஒலியென்பதானால்) என்ற பொருளுடைத்ததனால் கணபதிக்கு பிரம்மணஸ்பதி (சப்த பிரபஞ்சத்துக்குத் தலைவர்) என்ற பெயரும் உண்டு.

மனிதனின் ஒலி நிலைகளுக்கும் ஓங்காரமே மூலமானது. அதனைச் சைவசித்தாந்திகள் பின்வருமாறு விளக்குவர். இறையருளால் சுத்தமாயையான ஒலிகளும் கலை முதலிய வித்தியா தத்துவங்களும் உயிருடன் கூடியவுடன் உயிரின் மூலாதாரத்தில் விளங்கும் விந்துதத்துவத்திலி ருந்து சூக்குமை எனும்

**செயற்கரிய செய்வர் பெரியர்**

ஒப்பற்ற நுண்ணொலியானது எழுத்துக்கள் பிரிந்து ஒலிக்காதவகையில் இதயத்தை வந்தடைந்து சிந்தையில் நிற்கும். இந்நிலையில் இவ்வொலி விகற்பமான உணர்வுகளை ஏற்படுத்துதலாற் பைசந்தி எனப்படும். பின் இவ்வொலிகள் கழுத்தையடைகையில் எழுத்துக்கள் பிரிந்து தோன்றினும் தன் செவிக்கு மட்டுமே எட்டுவதாய்ப் பிறர் செவிகளுக்கு கேட்கப்படாததாய் விகற்ப உணர்வுகளுடன் கூடி இருக்கும் நிலையில் மத்திமை ஒலி எனப்படும். இந்நிலையில் வயிற்றிலுள்ள பிராணவாயுவினால் ஒலிகள் வெளியே தள்ளப்படும் பொழுது எழுத்துக்கள் நுண்வடிவிற் தோற்றம் பெற்றுத் தன் செவிக்கும், பிறர் செவிக்கும் கேட்கப்படும் நிலையையடைந்து நினைத்த பொருளைச்

சொல்லும் சொல்லாக உருவெடுக்கும். இந்நிலையில் இது வைகரி எனப்படும். இவற்றுள் மூலாதாரத்தில் தோன்றிய சுத்தமாயை வடிவான நுண்ணொலியே அழியாத ஓங்காரமாகும்.

மற்றவை யாவும் அழியும் இயல்புடையன. இனிச் சிவத்திற்கும் சக்திக்கும் நிலைக்களமான நாதமும் விந்துவும் சுத்தமாயையிற் தொழிற்படும் வகையும் எவரும் அறியார்

இவ்வாறு ஓங்காரமும் பிரபஞ்சத்தில் அண்டபிண்டமெல்லாம் மறைந்து நின்று இயங்குவதனால் ஓங்காரத்தைப் பரம்பொருளாகவே தியானிப்போமாக. ஓம் அந்தப் பரம்பொருளே. அதனால் இத்தெய்வீக ஒலியை நாமும் இசைத்துப் பிரபஞ்சத்தில் தெய்வீக ஒலி அலை–களை வீசச்செய்து அமைதியை ஏற்படுத்துவோமாக.




SHIPPING - AIR FREIGHT - TRAVEL

**UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC.**

**TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS**

**MAIN AGENT FOR SRILANKAN AIRLINES**

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

All Your Goods Go To Our Bonded Warehouse in Colombo

**WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME**

**ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES**

SriLankan

**14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ**

SriLankan

**GLEN CARRIERS LIMITED**

**Tel: 0208 740 8379/ 0208 749 0595**
**Fax: 0208 740 4229**
**BONDED WARE HOUSE**
**LAKSIRISEVA , 66 NEW NUGE RD, PELIYAGODA**
**TEL: 575576**


**பாதம் காணப்பெற்றால் மனிதப்பிறவியும் வேண்டுவதே**

# திருவருட்பயன் கற்போம்

## முனைவர் ஆ. ஆனந்தராசன்

## உமாபதி சிவாசாரியார்

மெய்கண்டாரோடு தொடங்கிய சைவ சித்தாந்த ஆசாரிய பரம்பரையில் நான்காம் ஆசிரியராக வந்தவர் இவர். மெய்கண்டார் செய்தருளிய சிவஞானபோத நூலுக்குச் சார்பாகச் சிவப்பிரகாசம் என்ற நூலைச் செய்தவர். உமாபதிசிவம் செறிவும் திட்ப நுட்பமும் அமையத்தாம் செய்த சிவப்பிரகாச நூலைச் சைவ உலகம் விளங்கிக் கொள்ளுதற்குத் துணையாகும்படி மற்றொரு சிறந்த நூலையும் ஆக்கி அளித்தார். அதுவே இத் திருவருட்பயன் ஆகும்.

உமாபதிசிவம் திருக்குறளை அடியொற்றியே தமது திருவருட்பயனை அமைத்துக் கொண்டார். சிவ-நெறித் திருக்குறள் என்று சொல்லுமாறு இதனை அமைத்துள்ளார்.

இத்தகு சிறப்பு வாய்ந்த திருவருட்பயனை யாவரும் கற்றுத்தேறவேண்டும் என்ற நோக்குடன் முனைவர் ஆ. ஆனந்தராசன் அவர்களுடைய உரையை உங்களுக்குத் தரலாமென்று எண்ணியுள்ளேன்.

## காப்புச் செய்யுள்

**நற்குஞ்சரக் கன்று நண்ணின் கலை ஞானம்**
**கற்குஞ் சரக்கன்று காண்**

## பொருள்:

அருள் வடிவான யானைக்கன்றாகிய விநாயகப் பெருமானைப் புகலாக அடைந்தால் மெய்ந் நூலறிவு வருந்திக் கற்க வேண்டிய பொருள் ஆகாது. அஃது எளிதில் வரும்.

விளக்கம்:

## குஞ்சரக்கன்று

குஞ்சரம் என்பதற்கு யானை என்பது பொருள். யானை முகத்தினை உடைய பிள்ளையாரை யானைக் கன்று என்று குறிப்பிட்டார் ஆசிரியர். இளமை மாறி முதுமையடைதலும் நலிவுறுதலும் நம்மவர் நிலை. ஆயின் பெருமானுக்கு அந்நிலை இல்லை. அவர் என்றும் ஒரு தன்மையராய் இருப்பவர். என்றும் இளமையானவர். அது பற்றியே அவர் கன்று எனப்பட்டார். உலகத்தில் உள்ள யானைக் கன்றுகளினின்றும் வேறுபடுத்திக் காட்டுதற்கு அருள் வடிவம் கொண்ட யானைக் கன்று என்றார் ஆசிரியர். நல் குஞ்சரம் என்பதில் உள்ள நன்மை, இந்த இடத்தில் அருள் வடிவம் எனப் பொருள் தந்து நின்றது.

## நண்ணுதல்

நண்ணுதல் என்பதற்குச் சேர்தல் என்பது பொருள். நற்குஞ்சரக்கன்றைச் சேர்தலாவது அப் பெருமானை இடைவிடாது நினைத்தலேயாம்.

நம் எண்ணத்தில் இப்பொழுது உலகியல் பொருள்களே இடம் பெற்றுள்ளன. வீடு, நிலம், மனைவி, மக்கள், பதவி, செல்வம் முதலியவை பற்றிய எண்ணங்களே நம் நெஞ்சில் நிரம்பியுள்ளன. இஃது எதைக் காட்டுகின்றது? நிலையற்ற உலகியல் பொருள்களுக்கு நாம் எவ்வளவு

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர்**

முதன்மை கொடுத்து வருகிறோம் என்பதையே இது காட்டுகின்றது.

இந்நிலை மாறி உலகியல் மீது வைத்துள்ள பற்று படிப்படியே ஒழியவேண்டும். இறைவன் ஒருவனே நம் வாழ்வுக்கு முதலாக இருப்பவன். அவனே எல்லாஉயிர்களுக்கும் புகலாக உள்ளவன். அவனையே நாம் பற்றாகப் பற்றவேண்டும். அவனையே இடைவிடாது எண்ணவேண்டும். இவ்வாறு மனம் மொழி மெய்களால் அவனை வழிபடுதலையே நண்ணுதல் என இங்குக் குறிப்பிட்டார்.

## கலைஞானம்(மெய்ந்நூலறிவு)

நூல்கள் இருவகைப்படும். அவை உலக நூல்கள், மெய்ந்நூல்கள் என்பன. உலகியல் பற்றி எழுந்தவை உலக நூல்கள். வீட்டு நெறியை உணர்த்துவன மெய்ந்நூல்கள்.

உலக நூல்களை யாரும் கற்கலாம். பல துறைகளைச் சார்ந்த உலக நூல்களை அவ்வத் துறையில் வல்ல ஆசிரியரைக் கேட்டு விளங்கிக் கொள்ளலாம்.ஆனால் மெய்ந் நூல்கள் அத்தகையன அல்ல. அவற்றைக் கற்க பக்குவம் வேண்டும். பக்குவமில்லாதவர் கற்க முன் வரார். ஒருவேளை முன்வந்தாலும் பொருளை தெளிவாக விளங்கிக் கொள்ள மாட்டார். ஏனெனில் ஆசை வெகுளி முதலிய மாசுகள் மனத்தில் இருக்கின்ற வரையில் அம் மனத்தில் ஞான நூற் பொருள்கள் பதிய மாட்டா. மனம் மொழி மெய்களினால் இறைவனை உண்மையாக வழிபட்டு வருபவர்க்கு மனமாசுகள் அகலும். உள்ளத் தூய்மை உண்டாகும். அவரே பக்குவம் உடையவர். அவரே மெயந்நூலறிவைப் பெறுதற்கு உரியவர்.

## கற்குஞ் சரக்கன்று

பொருளியல்பை உள்ளவாறு உணர்தலே ஞானமாகும். அஃதாவது தனக்குப் புகலாகிய இறைவனது இயல்பையும் அவன் வழியில் நிற்றற்குரிய தனது இயல்பையும், அவ்வாறு நிற்கவொட்டாது தன்னைத் தடுத்து நிற்கும் தளையினது நிலையையும் உள்ளவாறு உணர்தலே ஞானமாகும்.

இந்த ஞானத்தைத் தரும் மெயந்நூல்களை ஒருவர் தானே முயன்று கற்று ஞானத்தைப் பெறுதல் என்பது இயலாது. ஏனைய ஆசிரியர்மார்களை அடைந்து வருந்திக் கற்று ஞானத்தைப் பெறலாமென்பதும் இயலாது. ஏனெனில் நம்மினும் சிறிது அதிகம் கற்ற அவ் ஆசிரியர்கள் உலக நூற்பொருள்களை உணர்த்த வல்லவர்களே ஒழிய ஞானநூற் பொருளை உணர்த்தும் தகுதியுடையவரல்லர்.

அவ்வாறாயின் ஞானத்தைப் பெறுதல்தான் எவ்வாறு? என்ற வினா எழும். மூத்த பிள்ளையாரது திருவடிகளை இடையறாதுபற்றி நின்று வழிபட்டுவரின் அவர் உள்நின்று உணர்த்த மெய்ந்நூலறிவு எளிதில் வந்தடையும் என்பதே அதற்கான விடையாகும்.

வழிபாட்டின் மூலம் பக்குவம் எய்திய உயிருக்கு இறைவன்தானே ஞானத்தை உணர்த்துவான் என்பது கருத்து.

## காண்

செய்யுளின் இறுதியில் காண் என்ற முன்னிலைச் சொல் உள்ளது. அறிவாயாக என்பது அதற்குப் பொருள். அவ்வாறாயின் ஆசிரியர் யாரை முன்னிலைப் படுத்தி இக் கருத்தைக் கூறுகின்றார்.ஆசிரியர் தம் நெஞ்சை முன்னிலைப்படுத்தி நெஞ்சமே! நாமும் அப் பெருமானை நண்ணி அவனருளால் இந்நூலை எளிதில் முற்றுவிப்போம் என்று கூறியதாகக் கொள்ளலாம். அல்லது மாணவனை முன்னிலைப்படுத்தி மாணவனே! நீ அப் பெருமானை உள்ளம் உருகி வழிபட்டு இந்நூலைக் கேட்பாயாயின் அவனருளால் மெய்யறிவாகிய ஞானம் உனக்கு எளிதிற் கை கூடும் என்று கூறியதாகவும் கொள்ளலாம்.

(இன்னும் வரும்)

**அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு**

# விழிப்பும் உறக்கமும்

சைவசித்தாந்த செம்மல், முனைவர் ச. கங்காதரன்

பாரசீகக் கவிஞர் ஒருவர் தத்துவம் என்பது முன் சில பக்கங்கள் இறுதியில் சிலபக்கங்கள் இல்லாத நூல் போன்றது என்று கூறுகின்றார்.

அதாவது நூலின் முதல் முப்பது பக்கங்கள் காணப்படவில்லை. அதாவது முப்பத்தியோராவது பக்கத்திலிருந்து இருநூற்றி எழுபதாம் பக்கம் வரை உள்ள நூல் திடீரென்று முடிவில்லாமல் காணப்படுகின்றது. அதாவது இருநூற்றியெழுபதாம் பக்கத்துக்குப் பிறகு குறைந்தது முப்பது பக்கங்களாவது இருக்கவேண்டும் என்ற உணர்வு இருநூற்றெ ழுபதாம் பக்கத்தைப் பார்க்கும் போது நமக்கு ஏற்படுகிறது.

சைவ சித்தாந்த நோக்கின்படி நம் வாழ்வும் இவ்வாறுதான் அமைகிறது. ஒருவர் பிறப்பதற்கு முன் தாயின் வயிற்றில் பத்து மாதங்கள் இருந்து 12-9-1920 அன்று பிறக்கின்றார். வாழவேண்டிய முறையில் முழுமையான வாழ்க்கை வாழ்ந்து இறக்கிறார். தாயின் வயிற்றில் பிறப்பதற்கு முன் அவர் எங்கு இருந்தார். உடலில் உயிர் பிரிந்தபின் எங்கு இருக்கிறார்.? எனும் கேள்விகட்கு சைவசித்தாந்தம் கூறும் பதிலைப் பார்ப்போம். நமக்குக் கொடுக்கப்பட்டவற்றைக் கூர்ந்து ஆய்வதின் மூலம் உண்மையை ஒருவாறு உணரலாம். தந்தைமூலம் தாயின் வயிற்றிற் தோன்று முன்பு கேவலம் என்ற நிலையில் ஆன்மா இருக்கிறது. கேவலம் என்ற வட சொல்லுக்குத் தனிமை என்பது பொருள். சங்கரர் கொள்கையில் கேவலம் என்ற சொல்லோடு தொடர்புடைய கைவல்யம் என்பது மிக உயர்ந்தநிலை. சொல்லுக்கும் மனிதனைப்போல் வாழ்வு தாழ்வு வரும். என்னைக் கேவலப்படுத்திவிட்டான் என்று சொல்லும் போது வரும் கேவலம் வேறு- கைவல்யம் என்பதில் தொடர்புடைய கேவலம் வேறு. கேவலம் என்பது சைவத்தில் ஆன்மாவும் ஆணவமும் மட்டும் இருக்கும் நிலை. இந்நிலையில் ஆன்மா கட்டுப்பட்டு இருந்தும் தான் கட்டுப்பட்டு இருக்கிறது என்னும் உணர்வு நிலை இல்லை. காரணம் நினைப்பதற்குக் காரணமாகிய மனம் இல்லாமல் ஆன்மா கேவலத்தோடு மட்டும் இருப்பதுதான். பல்வகையில் செயல் செய்யக்கூடிய ஆன்மா-வள்ளுவர் கூறியபடி இல்லறத்தில் வாழ்வாங்கு வாழக்கூடிய ஆன்மா நன்றும் செய்யாமல் ஆணவத்தால் கட்டுப்பட்டு இருக்கிறது. இந்நிலையைக் கண்டு பரிதாபப்பட்டு சிவபெருமான் இவ்வான்மாவுக்கு உடல் (தனு) கருவி(கரண) இடம் (புவனம்) நுகர்ச்சிப்பொருட்கள் (போகம்) என்பவற்றைத் தம் அருளால் சேர்க்கிறார். கலையின் காரியமாகிய உடல் முதலியவற்றுடன் சேரும்போது இதற்குச் சகலம் என்ற பெயர் கொடுக்கப்படுகிறது. சிவபெருமான் உயிருக்கு உடல் முதலியவற்றைக் கொடுப்பது உயிரைக் கட்டுப்படுத்தியுள்ள ஆணவமலத்தின் தீய சக்தியை நீக்குவதற்குத்தான் என்று சைவம் கூறும்.

கேவலம் என்ற சொல்லைத் திருவள்ளுவர் இருள் என்று பயன்படுத்துகிறார். இருள் சேர் இருவினை இருள்சேர்ந்த இன்னா உலகம் என்னும் தொடர்களில் இருள் ஆணவமலத்தைக்
குறிப்பிடுவதைக் காணலாம்.

**பொருள் அல்லாவற்றைப் பொருள் என்று**
**உணரும் மருளான் ஆம் மாணாப்பிறப்பு**

எனும் குறளில் மெய்ப்பொருள் அல்லாதவைகளை மெய்ப்பொருள் என்று தவறாக உணர்கின்ற மயக்க உணர்வால் சிறப்பில்லாத துன்பப் பிறவி உண்டாகும் எனும் பொருளைத்தரும். இக்குறளில் வரும் மருள் என்னும் தொடர் சகல நிலையைக் குறிக்கிறது எனலாம். உடல் கருவி உலகம், நுகர்வுப்பொருள் இவை தரப்பட்டதன் உண்மையை உணர்ந்து நாம் கட்டுப்பாட்டுடன் நடந்தால் நமக்கு ஆணவ மலத்தின் தீய சக்திகளிலிருந்து விடுபடும் சுத்த நிலை கிடைக்கும். இந்த நிலையை அருள் நிலை என்று கூறலாம் சைவசித்தாந்தம் கேவலம், சகலம், சுத்தம் என்று கூறுவதைத் திருவள்ளுவர் முன்பே இருள், மருள், அருள் என்று கூறினார் எனக்கொள்ள இடமுண்டு. தூய்மைஎன்பது அவாவின்மை என்பது வள்ளுவம். திருவள்ளுவர் அறத்துப்பாலில் நிலையாமை, துறவு, மெய்யுணர்தல் அவாவறுத்தல் என்று கூறும் போது அவா அறுத்தல்தான் சமய நிலையில் முடிந்த நிலையாகக் கூறுகிறார். இருக்கிற அவாக்களை முதலில் சீர் அமைத்துக் கொள்ளவேண்டும். பிறகு படிப்படியாக ஒவ்வொன்றாகக் குறைத்து ஆன்மீக வாழ்க்கை வாழப்பழகவேண்டும்

**செல்வர்க்கு கழகு செழுங்கிளை தாங்குதல்**

**உறங் குவது போலும் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு**

இறப்பு எனப்படுவது ஒருவனுக்கு உறக்கம் வருதலைப் போன்றது. பிறப்பு என்பது உறக்கம் நீங்கி விழித்துக்கொள்வது போன்றது என்பது திருக்குறளின் பொருள். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து உயிர்விட்டவர்களின் உடல் உறங்குவது போல் இருப்பதைத் தற்போதும் காணலாம். இக்குறளைச் சைவத்தோடு இணைத்து அறிவதை தற்போது நோக்கலாம்.

சிவம் என்ற சொல் பலபொருள்களுடன் மங்கலம் என்னும் பொருளையும் தரும். மங்கலம்

என்றால் நன்மை. மங்கலம் என்ற சொல்லின் பொருளை அதன் எதிர்மறையான அமங்கலம் தீமை என்ற சொல்லோடும் இணைத்துப் பொருள் கொள்ளலாம். அறிவு இன்மை, செல்வம் இன்மை இவையெல்லாம் தீமைகளில் குறிப்பிடத்தக்கவை. ஆனால் இறப்பைவிடப் பெரிய தீமை இருப்பதாகத் தெரியவில்லை. இக்கருத்தை மனதில் கொண்டு சிவம் என்பதற்குப் பொருள் கொண்டால் உயிர் உடலில் வாழும்போதே இறப்பைப்பற்றிய அச்சத்தை வென்று (அஞ்சுவதற்கு அஞ்சி)
வையத்துள் வாழ்வாங்கு வாழும் முறை என்று கூறலாம்.

உறக்கம் என்பதை இரவு என்றும் விழிப்பு என்பதைப் பகல் என்றும் தத்துவநூல்கள் கூறும் கேவலம், சகலம் என்று சைவம் கூறுவதை இவ்வகையில் நோக்கினால் வீடு என்பது இரவு பகல் இல்லாத இன்பவெளி என்று ஆகிறது.

**இரவு பகல் இல்லா இன்பவெளியூடே**
**விரவி விரவி நின்று உந்தீ பற**
**விரைய விரைய நின்று உந்தீ பற**

என்று திருவுந்தியார் ஆசிரியர் திருவியலூர் உய்யவந்ததேவர் கூறுகிறார். உடல் கருவி முதலியவற்றை முறையாகப் பயன்படுத்த பயன்படுத்த அறியாமை சிறிது சிறிதாக நீங்கும். அறியாமை முற்றாக நீங்கும்போது உயிர் ஒளியின் முழுமையில் மூழ்கும் ஆணவ உறக்கத்திலிருந்து ஆன்மா நிலையான விழிப்பு பெற வேண்டுமெனில் சில உண்மைகளை ஆன்மா தெளியவேண்டும் அவற்றில் முக்கியமானவை

தீதும் நன்றும் பிறர் தர வாரா புறநானூற்று காலத்திலிருந்து இம்மொழி கூறப்பட்டாலும் இம்மொழியின் முழுமைப்பொருளை நாம் உள்ளவாறு உணர்வது அவ்வளவு எளிமை யானதல்ல. நம் முன்னேற்றத்துக்குச் சிலர்
தடையாக இருக்கிறார்கள் என்று நிச்சயமாக நம் அறிவுக்குப் படினும் நம் வினையின் தன்மையில்லாமல் அவர் நமக்குத் தீங்கு விளைவிக்க இயலாது. அவர் தீங்கு செய்கிறார் என்பதை அறியும்போது விழிப்பாக இருந்து தடுக்கக் கூடியவற்றை நாம் தடுக்கவேண்டும். நம் முயற்சியை மீறியும் நமக்குக்கெடுதல் வருகிறது என அறிந்தால் அது நம் வினை என்று அமைதிபெறவேண்டும். வினை எப்போதும் சில ஆட்கள் அல்லது நிகழ்வுகள் மூலம் தான்வரும். யார் மூலமாக வருகிறதோ அவர்கள் தான் காரணம் என்று நாம் கருதக்கூடாது.

இவ்வகையில் ஞானாமிர்தம் என்ற சைவசித்தாந்த நூலின் ஆசிரியர் வாகீச முனிவர் கூறுவதை நாம் எண்ணலாம். ஞமலியின் அறியரோ அறியர்-- என்பது அவர் கூற்று ஞமலி என்றால் நாய். அறியர் என்றால் இரங்கத்தக்கவர்கள். அதாவது நாய்க்கு இருக்கிற அறிவுகூட நமக்கு இல்லையே என்று அவர் ஆதங்கப்படுகிறார். நாய் மீது ஒரு சிறுவன் கல்லை எறிகிறான். நாய் மீது படுவது கல். நாய் கல் மீது சீறிப் பாய்வதில்லை. கல் சடப்பொருள். தானாக தன் மீது அது வாராது என்று அதனுக்குத் தெரிகிறது. ஆகவேதான் கல் மீது கோபம் கொள்ளாமல் கல்லை எறியும் சிறுவன்மீது பாய்கிறது. நாம் முன்பு செய்த வினைதான் நம்மைப் பாதிக்கிறது என்பதை மறந்து யார் மூலமாக வினை நமக்கு வருகிறதோ அவர்கள் மீது கோபம் கொள்கிறோம். ஆகவே தீதும் நன்றும் பிறர் தரவாரா என்று உணர்வதன் மூலமே நாம் விழிப்பு பெறமுடியும்.
சிவபெருமான் நீதியோடு கூடிய கருணை வடிவானவர். ஆகவே வினைப் பயன்களை நுகர்தற்குத் தரும்போது உயிரின் அநுபவிக்கும் வலியை அறிந்துதான் கொடுக்கிறார். வினையின்
கடுமையைப் பார்த்து நாம் அச்சம் கொள்கிறோம். இந்தச் சிக்கலை எவ்வாறு தீர்க்கப் போகிறோம் என்று சங்கடப்படுகிறோம். மனிதனால் தாங்கக்கூடிய கஷ்டத்தையே கடவுள் தருகிறார். என்பது இறைய-யெலாளர் கூற்று. ஆகவே சிக்கலான சூழ்நிலை வரும்போதே, அதை கடவுள் கொடுக்கிறார் என்று நம்புவதே சிக்கலை வெல்வதற்குரிய வழி. நாம்

நம்முடைய பழைய அனுபவங்களையும் எண்ணிப்பார்க்கலாம். தீர்க்க இயலாத சிக்கல் என்பவை

**அறத்தை மறத்தலினூங்கில்லைக் கேடு**

எல்லாம் திருவருளால் தீர்ந்திருக்கின்றன. ஆகவே இதுவரை காப்பாற்றிய கடவுள் தற்போதும் காப்பார் என்ற நம்பிக்கையுடன் சிக்கலைத் தீர்ப்பதற்கு முயலுவதே நாம் மேற்கொள்ள வேண்டிய சரியான வழியாகும்.

கடவுள் நம்முடன் இருந்து ஒவ்வொரு நொடியும் உதவி செய்து வருகிறார் என்பதை நாம் நம்பவேண்டும். சைவ சித்தாந்தம் கூறும் சிவத்துக்கும் நமக்கும் உள்ள உடனாதல் என்னும் உறவு இந்த உண்மையையே வற்புறுத்துகிறது. ஒரு பறவை பழத்தை உண்ணுகிறது. மற்றொரு பறவை பழத்தை உண்ணுகிறது. மற்றொருபறவை பழத்தை உண்ணுகிற பறவையைப் பார்க்கிறது என்று ரிக்வேதப் பகுதி ஒன்று வருகிறது. பழத்தை உண்ணுகிற பறவை ஆன்மா. பழத்தை உண்ணுதல் வினையை நுகர்தல். பக்கத்தில் உள்ள பறவை வெறுமனே பாத்திராமல் எப்படி பழத்தை நுகர்ந்தால் பாதிப்பு வராது என்பதைத் தெரிவித்துக்கொண்டு இருக்கிறது. ரிக்வேதம் கூறும் இக்கருத்து முண்டகம், சுவேதாசுவத்ரம் முதலிய உபநிடதங்களிலும் காணப்படுகிறது.

**அன்னம் இரண்டுள ஆற்றங்கரையினில்**
**துன்னி இரண்டும் தனிப்பிரியாது அன்னம்**
**தன்னிலை அன்னம் தனியொன்றது என்றக்கால்**
**பின்ன மடவன்னம் பேறணுகாதன்றே**

என்னும் திருமந்திரப் பாடலில் இக்கருத்தை சிறிது மாற்றி விளக்கியிருக்கிறார். மரக்கிளைக்குப் பதில் ஆற்றங்கரை இரண்டு அன்னம் நெருங்கியிருப்பது சிவபெருமானும் ஆன்மாவும் நெருங்கியிருப்பதைக் குறிக்கிறது. சிவபிரான் உடனிருந்து ஆன்மாவுக்கு வழிகாட்டுகிறார். இவ் உண்மை பக்கத்தில் இருக்கிற பறவை பார்த்தால் தான் விளங்கும் தன் கஷ்டத்தைத் தானே அநுபவிக்கவேண்டும் என்று எண்ணி பக்கத்தில் உள்ள பறவையைப் பார்க்க வில்லையானால் பக்கத்துப் பறவை செய்யும் உதவி தெரியாமல் போகிறது.

**திருகு சிந்தையைத் தீர்த்து செம்மை செய்து**
**பருகி ஊறலைப் பற்றிப் பதமறிந்து**
**உருகி நைபவர்க்கு ஊனம் ஒன்று இன்றியே**
**அருகு நின்றிடும் ஆனைக்கா அண்ணலே**

அருகு நின்றிடும் ஆனைக்கா அண்ணல் என்ற அப்பர் தொடரின் பொருளைப் புரிந்து கொள்ளவேண்டும் என்றால் முன்பு குறிப்பிடப்பட்ட ரிக்வேத மெழி சுவேதாசுவத்ர உபநிடதமொழி, ஆகியவற்றின் பின்புலத்தில் தான் முழுமையாக உணரமுடியும்.

உழைப்பு வீண் போகாது என்ற உண்மையை நாம் உணரவேண்டும். சூழ்நிலைகள் சிறப்பாக அமையும் போது உழைப்பு அப்போதே பயன் தரும். சூழ்நிலைகள் சிறப்பாக அமையாதபோது உழைப்பு உடனே பயன்தராது. உடனே பயன் தராதபோது நாம் சோர்ந்து உழைக்காமல் இருந்து விடக்கூடாது. ஏனெனில் காலம் கண் போன்றது. இழந்த பணத்தை முயன்றால் பெறலாம்.

இழந்த காலத்தை மீண்டும் பெற இயலாது. ஆகவேதான் உழைப்பு உடனே பயன்தரா விட்டாலும் உழைத்துக் கொண்டே இருக்கும் கட்டுப்பாட்டை நமக்கு நாமே விதித்துக் கொள்ளவேண்டும்.

சிலசமயம் சூழ்நிலைகள் நன்கு அமையும் பல நேரங்களில் நமக்குத் தேவையான சூழ்நிலைகளை நாமே முயன்று பெறவேண்டும். உழைப்பதற்கேற்ற சூழ்நிலை- களை நாமே உருவாக்கி, உழைப்பு உடனே பயன்தராத போதும் உழைத்துக் கொண்டிருக்கவேண்டும். ஏமாற்றம் நம் உயிர்ப்பை சிலசமயம் அழித்துவிடலாம். அப்போது கீழ்க்காணும் குறளை நாம் எண்ண வேண்டும்.

**ஊக்கமுடையான் ஒடுக்கம் பொருதகர்**
**தாக்கற்குப் பேருந் தகைத்து**

ஆடு சண்டையின்போது சிலசமயம் பின்செல்வது அப்போது ஓய்வு எடுத்துக்கொண்டு பிறகு அதிக- உயிர்ப்புடன் தாக்குவதற்காகவே. அதுபோல ஒடுங்கவேண்டிய காலம் குறிப்பிட்டநேரம் ஓய்வு எடுத்து பிறகு கடமையைச் செவ்வனே செய்யும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கவேண்டும். இத்தகு உண்மைகள் வாழ்வில் விழிப்புடன் இருந்து செயற்பட உதவுகின்றன எனலாம்.

முற்றும்



**பாலைச் சுருக்கி மோரைப் பெருக்கி நெய்யை உருக்கி உண்க**

# இலண்டன் முத்து மாரியம்மன் ஆலயம்

**அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் இருபத்தொரு அடி உயர தங்கக் கலசம் கொண்ட புதிய சித்திரத்தேரில் பவனி**

எல்லாம் வல்ல அருள் மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் அடியார்களுக்கு அருள் புரிய இருபத்தொரு அடி உயரமும் தங்கக் கலசமும் கொண்ட புதிய அழகிய சித்திரத்தேரில் எழுந்தருளி
பவனி வர திருவருள் கூடியுள்ளது.
நிகழும் விஷு வருஷம் ஆவணிமாதம் பதினோராம் நாள்( 27-08-2001) திங்கட்கிழமை வங்கி விடுமுறை தினத்தில் இலண்டன் ரூட்டிங் மிச்சம் கொலியர்ஸ்வூட் ஆகிய பகுதிகளில் உள்ள வீதிகள் ஊடாக பவனி வந்து அடியார்களுக்கு
அருள்பாலிக்க அம்பாள் சித்தம் கொண்டுள்ளாள்.

காலை ஏழுமணிக்கு சித்திரத்தேர் வடம்பிடிக்கப்பட்டு மைதானத்தில் பல மணிநேரம் தங்கியபின் மாலை எட்டு மணிக்கு மீண்டும் நிலைக்கு வரும் என எதிர்பார்க்கிறோம்.

கொழும்பில் ஆடிவேல் விழாவைப்போல் இது அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடியார்கள் அனைவரும் திரளாக கலந்துகொண்டு முத்துமாரி அம்மனின் அருட்பார்வை கிடைக்கப்பெற்று வாழ்வில் எல்லா நலன்களும் அடையுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**பசிவந்திடப் பத்தும் பறந்து போம்**

# இலண்டன் அருள்மிகு
# முத்துமாரியம்மன் கோவில்
# சிவயோகம்
# திருமணமண்டபம்

**இரு வருடங்களில் 200 திருமணங்களைக் கண்ட ராசியான திருமண மண்டபம்,**

**500 இருக்கைகள்**

**அழகிய மணவறைகள்**

**அலங்கார ஜோடனைகள்**

**இசைக் கருவிகள்**

**உணவு வசதிகள்**

சகலதும் சிறந்த முறையில் அமைந்துள்ள இலண்டனில் உள்ள ஒரே ஒரு திருமண மண்டபம்

தொடர்புகட்கு:

நிர்வாகி

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்

சிவயோகம்

# தொலைபேசி: 0208 767 9881

## தொலைநகல்: 0208 767 9881


**உய்வில்லை செய்நன்றி கொகென்ற மகற்கு**

# விநாயகர் வழிபாடு ஒரு வரலாற்றுப் பார்வை

**முனைவர் இரா செல்வக்கணபதி எம் ஏ பி எச் டி**

**நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்**
**கற்குஞ் சரக்கன்று காண்**

**முதற்பதிவு**

உலகெலாம் வாழும் இந்துசமயத்தவரின் இஷ்ட தெய்வமாக விநாயகர் விளங்குகின்றார். வட இந்தியாவில் முதன் முதல் தோற்றம் கொண்டு கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்குப் பின் தென் தமிழ்நாட்டுக்கும் பரவியது என்பர் ஆய்வாளர். சங்க இலக்கியங்களுக்கு எல்லாம் கடவுள் வாழ்த்துப்போல் திகழ்வது நக்கீரரின்திருமுருகாற்றுப்படை. சிவன், உமை, முருகன் முதலிய கடவுளர் பற்றியும் இவர்களுக்கு இடையே உள்ள உறவு முறை பற்றியும் கூறும் இந்நூலுள் விநாயகர் பற்றிய குறிப்புக்கள் காணப்படவில்லை. பிறசங்க நூல்களுள்ளும் இந்துக் கடவுள்களைப் பற்றியும் கூறும் சிலம்பிலும் கூட விநாயகரைக் காணோம். தேவாரமூவர் காலத்துக்கு முற்பட்டவையாகத் திருமூலர் திருமந்திரத்தையும் கல்லாடம் என்ற அகப்பொருள் நூலையும் ஆய்வாளர் சிலர் ஏற்கின்றனர். இது உண்மையானால் இவை இரண்டையும் விநாயகர் பற்றிய குறிப்புக்களைக் கொண்டுள்ள முதல் நூல்களாக ஏற்கலாம்.

இவ்விரண்டிலும் திருமந்திரமே காலப் பழமை உடையது என்பது என் மதிப்பீடு.



**திருமந்திரம்.**

விநாயகர் திருமேனி அமைப்பு: சிவனோடு அவருக்குள்ள உறவுமுறை, இறைமை, அடையாளம் என்பவற்றைத் திருமந்திரத்தின் விநாயகர் காப்பு அழகுறப் பதிவு செய்துள்ளது. விநாயகர் ஐந்து கைகளை உடையவர். யானைமுகம் போன்ற முகம் கொண்டவர். பிறைச் சந்திரனை ஒத்த தந்தத்தை உடையவர் என்று முதல் அடையாளப் பதிவு அமைகிறது. அவரை நந்தி மகன் எனச் சிவகுமாரனாகவும் இந்நூல் இனம் காட்டுகிறது. ஞானத்தின் தெளிவானவர் என்று இறை இயல்பு சுட்டப்படுகிறது.

ஐந்து கரத்தனை ஆனை
முகத்தனை
இந்தின் இளம்பிறை
போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினை

**ஓடும் நீரினை ஓட்டைக்கு குடத்தட்டி மூடிவைத்தால் பயன் என்ன?**

புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.
என்பது அப்பாடல்.

கல்லாடக் காப்பு மேலும் விரிவாக விநாயகர் இயல்புரைத்து நீள்கிறது.

**மூவர் தேவாரம்**

மூவர் தேவாரத்துள் விநாயகர் பற்றிய குறிப்புக்கள் பரவலாகக் காணப்படுகின்றன. சிவன் களிற்று யானை வடிவு கொண்டும் உமை பெண்யானைவடிவு கொண்டும் கூடிக்கலந்து விநாயகரை ஈன்றளித்தனர் என்கிறார் திருஞானசம்பந்தர். சிவன்தாள் மலர்களை வழிபடுபவரின் துயரங்களை விரைந்து நீக்குவதற்கே விநாயகர் திருவவதாரம் அமைந்தது என்பர்.

தனதடி வழிபடும் அவர் இடர் கடி கணபதி
என்ற தொடரால் அவர் விளக்குகிறார். பல்வேறு ஆசைகளால் குழம்பிக்கிடக்கும் மனிதர்கள் உள்ளத்தே புகுந்து முன் கலக்கிப் பின் தெளிவிக்கும் இயல்பினர் விநாயகர் என்பது திரநாவுக்கரசரின் மதிப்பீடாகக் காணப்படுகிறது

பலபல காமத்த ராகிப்
பதைத்தெழு வார்மனத்துள்
கலமலக் கிட்டுத் திரியும்
கணபதி என்னும் களிறு

என்று தேவாரம் நீள்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்திலும் விநாயகர் குறிப்புக்கள் காணப் படுகின்றன.

**விநாயர் இயல்புகள்**

சிவனைத் தவிர வேறு தெய்வங்களைப் பாடாத மரபு பேணினர் மூவர் முதலிகள். உமை முருகன் விநாயகர் முதலிய எவருக்கும் ஒரு தனிப்பாடல் தேவாரத்துள் இல்லை. மேற்குறிக்கப்பட்ட பாடல் வரிகளிலிருந்து விநாயர் இயல்புகளாக மூன்று செய்திகள் முன்னிறுத்தப்பட்டுள்ளன.

ஒன்று விநாயகன் நன் ஞானத்தை வழங்கும் இயல்பினன் என்பது. இது திருமூலர் காண்பது. இரண்டு விநாயகன் விரைந்து அடியார் இடர்களையும் இயல்பினன் என்பது. இது திருஞானசம்பந்தரின் மதிப்பீடு. மூன்று உள்ளத்து எழும் குழப்பங்களுக்கு மருந்தானவன் என்பது. இது திருநாவுக்கரசரின் மதிப்பீடு. பின்வந்த விநாயகர் பெருமை பேசி எடுத்த தனிப்பாடல்களும், சிறு நூல்களும் மேற்குறித்த மூன்று இயல்புகளை விநாயகர் அருளிப்பாட்டுகளாகப் பதிந்துள்ளமை காணக் கிடக்கின்றன.

**சேனாவரையர்**

தொல்காப்பியம் சொல்லதிகார உரையின் தொடக்கத்தில் ஒரு மூன்று விநாயகர் காப்புக் காணப்படுகிறது. இது சேனாவரையர் பாடியதாகக் கொள்ளத்தக்கது. இப்பாடலில் விநாயகர் இயல்புகளுள் ஒன்றாக அவர் அன்பர்களின் மன இருளை அகற்றி ஆங்கே ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சும் இயல்பினர் என்ற அரிய குறிப்புக் காணப்படுகிறது. என் உள்ளமோ ஒரு பெருங்காடு. காட்டுள் ஒளிக்கீற்றுக்கும் இடம் இல்லை. நான் முயன்று ஒரு யானையை அக்காட்டுக்குள் கொண்டு வந்து நிறுத்திப் பிணித்தேன். என்னே வியப்பு. இருள் முற்றும் அகன்றது. ஒளி வெள்ளம் பாய்ந்தது என்கிறார் சேனாவரையர்.

தன்தோள் நான்கின் ஒன்றுகை மீகூஉம்
களிறுவளர் பெருங்கா டாயனும்
ஒளி பெரிது சிறுத்தன்று அளியவென் நெஞ்சமே
என்பது சேனாவரையத்தின் காப்பில் நிற்பது.

**ஐயனாரிதனார்**

ஐயனாரிதனார் என்பவர் புறப்பொருள் வெண்பா மாலை என்ற நூலின் ஆசிரியர். அவர் தம் நூலின் காப்புச் செய்யுளில் விநாயர் அருளிப் பாடுகிறார் ஒன்றாக ஒரு புதிய செய்தியைத் தருகிறார். விநாயகர் வழிபாடு கலைமகள் அருளை வழங்கும் என்பது அவர்தம் செய்தி. பிற ஆசிரியர் ஒருவரும் செஞ்சொல் பெருவாக்கும் பீடும் பெருக்கும் என்று விநாயகர் அருளை வியந்து உரைக்கிறார்.

**நடையூறு சொல்மடந்தை நல்குவதும்இடையூறு**
**நீங்குவதும் எல்லாம் புடையூறும்**
**சேனைமுகத் தாளிரிய சீறுமுகத் தூறுமதத்**

**வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர் இனத்தகத்தான்**

**தானைமுகத் தானை நினைத்தால்** என்பது புறப்பொருள் வெண்பாமாலையின் காப்பாகும்.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் என்ற திருமுறைத் தொடர் செல்வமகளாகிய இலக்குமியின் கடைக்கண் பார்வையும் விநாயகர் வழிபாட்டால் கிடைக்கும் என்று நம்பிக்கையூட்டி நிற்கிறது.

ஒன்று தெளிவாகிறது. ஒவ்வோர் பேறு வேண்டி ஒவ்வோர் தெய்வத்தைவணங்கி நின்ற நம்மை விநாயகர் ஒருவரை வணங்கினால் மட்டுமேகூடஅனைத்துத்தெய்வங்கள் வழங்கும் அருளிப்பாடுகளையும் பெறமுடியும் என்ற நம்பிக்கையை நம்முன்னோர் உருவாக்கிச் சென்றுள்ளமையை உணரமுடிகிறது.

**ஔவைப் படையல்**

ஔவையாரின் விநாயகர் துதியை அறியாதவர் இலர். பாலும் தெளிதேனும் என்ற அழகிய எளிய பாடலில் ஓர் அரிய உள்ளீடு உள்ளது.அதனை இனம்காட்டி இக்கட்டுரையை நிறைவிக்கலாம். பால் , தேன், பாகு, பருப்பு, இவற்றைப் படைத்தால் விநாயகர் சங்கத்தமிழ் மூன்றும் தருவார் என்பது போல் பாடலின் பொருள் தோற்றம் தருகிறது. பாடலில் நாலும் கலந்துனக்கு நான் தருவேன். என்ற தொடர் இடம்பெற்றுள்ளது. தருவேன் என்ற முற்றுவினையிலேயே எழுவாய் உள்ளடங்கி விடுகிறது. இருந்தும் நான் என்ற எழுவாயை எடுத்து மொழிந்தது ஏன் என்ற வினாப்பிறக்கிறது. இந்த நான் எழுவாயாக எனக்குத்தோன்றவில்லை. நான் என்ற அகங்காரத்தின் குறியீடாகவே தோன்றுகின்றது. பால் முதலியவற்றுடன் நான் என்கின்ற அகங்காரத்தையும் கலந்து எவன் விநாயகர்முன் படையலிடுகின்றானோ அவனுக்கே சங்கத்தமிழ் மூன்றும் தாமே வந்தெய்தும் என்பது உள்ளீடு. ஆணவப்படையலிட்டு ஐங்கரன் அருள்பெற்று உய்குவோம்.



**தனித்திரு விழித்திரு பசித்திரு**

# எனது பக்கம்

## ஆணவம்

ஆணவம் மனிதனைப் பாடாயப் படுத்துகின்றது. மனிதனுக்கு இந்த ஆணவம் எங்கிருந்து வருகின்றது?
மனிதன் என்றால் யார்? உடலும் ஆன்மாவும் ஒன்று சேரும்போது ஏற்படுகின்ற இயக்கத்தை மனிதன் என்று கூறலாம். மனிதன் இறக்கும்போது என்ன சொல்கின்றோம்? என்ன ஆட்டமெல்லாம் ஆடினான் இப்ப எல்லாம் அடங்கிப்போய்க் கிடக்கிறான் என்று சொல்கின்றோம். அடங்குவது என்ன? மனிதனின் இயக்கம் என்று விடை வருகின்றது. இந்த இயக்கம் மனிதனுக்கு எங்கிருந்து கிடைக்கிறது. இந்த இயக்கம் அடங்குவதாக இருந்தால் அது எங்கிருந்தோ வந்திருக்கவேண்டும். அந்த இயக்கத்துக்கு ஆன்மா என்ற பெயர் கொடுக்கப்படுகின்றது. இந்த ஆன்மா உடலுக்குள் வரு முன்பு எங்கிருந்தது? அப்படி ஒன்று இல்லை என்று வாதம் செய்வோருமுளர்.
உள்ளது அழியாது இல்லது தோன்றாது என்பது சைவ சித்தாந்த அடிப்படையாகும். மண்ணைக் கொண்டு பானையைச் செய்யலாம். பின்பு பானையை உடைத்து மண்ணாக்கலாம். அதே மண்ணைக்கொண்டு வீடும் கட்டலாம். இதே நிலைதான் ஆன்மாவுக்கும்.
ஆன்மா இருப்பதனாற்றான் அது உடலுள் புகுந்து இயக்கத்தைத் தோற்றுவிக்கின்றது. சைவ சித்தாந்தப்படி ஆன்மாவானது உடலுள் புக முன்பு கேவல நிலையில் இருப்தாகக் கூறப்படுகின்றது. கேவல நிலை என்பது ஆன்மா ஆணவத்தோடு மட்டும் இருக்கின்ற நிலையாகும்.
ஆக மொத்தத்தில் ஆணவம் பீடிக்கப்படும்போது கேவல நிலைதான் ஏற்படும் என்பது சொல்லாமற் சொல்லப்படுகின்றது.
மனிதர்கள் மத்தியில் இந்த ஆணவம் அறிவை மழுங்கடிக்கின்றது. அறிவற்ற நிலையில் மனிதன் கேவலமான செயல்களைச் செய்ய முயல்கின்றான். உண்மையில் ஆணவம் என்பது ஒரு மனிதன் தன்னிலை மறந்துபோதல் என்றாகின்றது. அதாவது தன்னுடைய யதார்த்தத்தை மறந்து அதற்கு மேலாகத் தன்னை உருவகம் பண்ணி தானும் சிக்கலுக்குள் மாட்டி மற்றவனையும் சிக்கலுக்குள் தள்ளிவிடுகின்ற நிலையே ஒரு மனிதனின் ஆணவ நிலையாகும். இந்த நிலையில் ஒரு மனிதன் பல அநியாயங்களுக்குத் துணை போபவனாகவும் அவ் அநியாயங்களைச் செய்பவனாகவும் மாறிவிடுகின்றான். இது தான் ஒரு மானிடனின் கேவல நிலையாகும்.
பலர் ஆணவமே அவர்களின் மொத்த உருவமாக இருக்க தம்மிடம் ஆணவம் கொஞ்சமும் இல்லை என்று பகிரங்கமாகக் கூறுவர். உண்மையில் இவர்கள் இப்படிக் கூறுதலே ஒரு வகை ஆணவம்தான்.
ஆணவத்தை வெளிப்படையாகக் காட்டுபவர்களைவிட ஆணவம் இல்லை என்று கூறுபவர்களே அபாயகரமானவர்கள்.


**சிவனெனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி எம்மான்**

இன்னொரு வகையினர் நிரம்பச் சேவை செய்வார்கள். ஆனால் தாங்கள் செய்யும் செயலுக்கு உடனடிப் பலனை எதிர் பார்ப்பார்கள். அப்படி இல்லாத பட்சத்தில் அதிகமாகக் கோபம் கொள்வர். இதுவும் ஒரு வகை ஆணவமே. இன்னுமொரு வகையினர் எதையும் தாமே செய்ய வேண்டுமென அடம் பிடிப்பர். இவர்கள் தங்களுடைய திறமையில் அசாத்தியமான நம்பிக்கை வைத்து மற்றவர்களைக் குறைவாக எண்ணிச் செயற்படுவர். இவ்வகையானவர்கள் எப்போதும் முரண்பாடுள்ளவர்களாகவே காணப்படுவர். இதுவும் ஒருவகையான ஆணவமே.

ஒரு சிலர் தமக்கு இவ்வுலகில் எதுவுமே தெரியாது என்று சாதிப்பர். இது சோம்பேறித்தனமல்ல. இது உண்மையில் எதிர் மறையான ஒருவகை ஆணவமே! இவர்களால் உதிரி நிலையில் எவ்விதமான பாதிப்பும் ஏற்படாமல் போயினும் சமூக நகர்வுக்கு இவர்கள் பயனற்றவர்களாகவே தோற்றுவர்.

சிலர் தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று சாதிக்க முயல்வர். யார் கூறினும் எல்லாவற்றையும் தட்டிக் கழித்து விடுவர். சில வேளைகளில் தம் செயலால் அதள- பாதாளத்தில் விழுந்து இன்னலுறுவர். ஆக ஆணவமற்ற நிலை என்பது பகவத் கீதையில் கூறியது போல் கடமையைச் செய் பலனை எதிர் பாராதே என்கின்ற பற்றற்ற நிலையே! இந்த நிலைக்கு நாம் வருவதின் மூலமாகவே உன்னத நிலையை அடையலாம். இந்த உன்னத நிலையே மனிதனை இறைவன் என்ற கருத்தோடு ஒன்ற வைக்கின்றது. இறுத்தல் என்ற சொல்லிலிருந்தே இறைவன் என்ற சொல் தோன்றியது. இறுத்தல் என்றால் இருத்தல் என்று பொருள் கொள்ளலாம். ஆயின் பற்றற்ற உன்னத நிலையில் ஆன்மா இருக்கும்போது இறைவன் என்ற கருத்து அவனோடு ஐக்கியமாகிவிடுகின்றது. எனவே ஆணவமற்ற நிலைக்கு நாமெல்லோரும் வந்து நம்மை நாமே காப்பாற்றிக் கொள்வோம்.





**சித்தத்தை ஒன்றவைத்தார்சிவமதே நினைய வைத்தார்**

House of fine Jewellery

East Ham மஹாலக்ஷ்மி ஆலயமருகே

# LAKSHMIS

## JEWELLERS & SILK HOUSE



East Ham மஹாலக்ஷ்மி ஆலயமருகே
பிரமிக்கத்தக்க அழகுக்காட்சியறையுடன்
வைரத்தாலிக்கொடி, சங்கிலிகள், காப்புகள்,
அட்டியல்கள்,படையப்பா நெக்கிலஸ்கள்
என சகல தங்க நகைகளும்
22 கரட்டில் உறுதியானவை.

திருமணத்திற்கான சிறந்த ரககூறைச் சேலைகள்,
காஞ்சிபுரம் ரங்கோலி,
கோலம், பட்டுப்புடைவைகள்

இன்னும் புதிய மிலேனியத்தில்
உங்கள் புதிய வாழ்வோடு இணைகிறது
DAKSHINOTRI
(டக்ஷ்சிநோற்றி)

**நம்பிக்கையுடன் வாருங்கள்**

**லக்சுமிஸ் ஜுவலர்ஸ்**
**& சில்க் ஹவுஸ்**

**276 High Street North, East Ham E12 6SA**
**Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448**
**Opening Hours: Mon - Sun 10.30am - 7.00pm**

தரம்! தெரிவு!! மலிவு!!!
Tax free for overseas visitors.

லண்டனில் முதலாவது தமிழர் நகைமாளிகை

# Western Jewellers



**Specialist in 22 ct. Gold Jewellery**

*Creates the New Woman*

230 UPPER TOOTING ROAD,
LONDON SW17 7EW

**Tel : 020 8767 3445**

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்

---

சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் வடிவமைக்கப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 020 8646 2885)
இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 29.07. 2001 அன்று வெளியிடப்பட்டது.